Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.No : 0777286247.
(சி/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 18 (07.07.2004) புதன்கிழமை இதழ்:278

# பொலனறுவ பகுதியிலுள்ள விகாரை ஒன்றிலிருந்து
# ஆயுதங்களுடன் பிடிபட்ட கருணா குழு
# மட்டக்களப்புக்குச் செல்லவிருந்ததாம்!

## இவர்கள் விடுவிக்கப்பட்டதால் புலிகள் விசனம்

(பொலனறுவ)

**பொலனறுவ மாவட்டத்திலுள்ள ஹிங்குராங்கொடவில் – விகாரை ஒன்றில் தங்கியிருந்தபோது – ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பதினான்கு இளைஞர்களும் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது குறித்து விடுதலைப் புலிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு மாவட்டம் தொப்பிகல காட்டுப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த கருணா குழுவைச் சேர்ந்த 14 பேர் நேற்றுமுன்தினம் மாலை பொலனறுவ - ஹிங்குராங்கொட பகுதியிலுள்ள விகாரை ஒன்றில் தங்கினர்.

விகாரையில் சந்தேகத்துக்கிடமான நபர்கள் இருப்பதை அவதானித்த சிலர் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து அங்கு விரைந்த பொலிஸார் மேற்படி 14 பேரையும் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கைது செய்தனர்.

அதேவேளை - இவர்களுடன் பயணம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியில்
## சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த அவசர பாதுகாப்புக் கூட்டத்தில் தீர்மானம்!



மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வீடுகளில் திடீர்த் தேடுதல்களை நடத்துவது, வீதிச் சோதனைகளை மேற்கொள்வது உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக அதிகரிப்பதற்கு -

நேற்று நடைபெற்ற அவசர பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலை குறித்து ஆராய்ந்து பாதுகாப்புப் பலப்படுத்துவது குறித்து ஆலோசித்து நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுது.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற இந்த அவசர பாதுகாப்பு மாநாட்டுக்கு இராணுவத் தலைமை அதிகாரியும், கிழக்குப் பகுதிக்கான கட்டளைத்தளபதியுமான மேஜர் ஜெனரல் சூலசெனிவிரத்தன தலைமை தாங்கினார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைவரம் குறித்து
## இந்தியத் தலைவர்களுடன் ஜான் பீற்றர்சன் ஆராய்வு!

(புதுடெல்கி)

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தொடர்பாகவும் -



உடன்பாட்டில் கையெழுத்திடும் நட்வர்சிங் - பீற்றர்ஸன்



டிக்ஸிற்றுடன் பீற்றர்ஸன்

இலங்கையின் இன்றைய நிலைவரம் தொடர்பாகவும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.என். டிக்ஸிற் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தினார்.

ஐவர் கொண்ட நோர்வேத் தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கி ஜான் பீற்றர்சன் ஒரு நாள் விஜயமாக நேற்று புதுடெல்கி சென்றிருந்தார்.

இதன்போதே - ஜான் பீற்றர்சன் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசர் கே.என்.டிக்ஸிற் ஆகியோருடன் தனித்தனியாகப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புக்களின் போது - இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட அதேவேளை - இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் குறித்தும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சமாதானப் பேச்சுக்கள் தாமதமடைவதால் அதிகரித்து வரும் பதற்றம் குறித்தும் இந்தச் சந்திப்பில் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் இந்தியத் தூதுவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார் எனவும் இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

## மோட்டார் சைக்கிள் மோதி இளம் குடும்பஸ்தர் பலி!

(யாழ்ப்பாணம்)

வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் ஒன்று - வீதியால் சென்று கொண்டிருந்த நபரொருவரை மோதிக் கொன்றுவிட்டு, தலைமறைவாகிய சம்பவமொன்று நேற்றுக் காலை 10 மணியளவில், கொக்குவில் - பூநாறிமரச் சந்தியில் இடம்பெற்றது.

கொல்லப்பட்டவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான நயீனாதீவு - 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை ஜெகநாதன் (வயது - 33) எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

தற்போது குளப்பிட்டிச் சந்திப் பகுதியில் வசித்துவரும் இவர், பொருட்கள் வாங்குவதற்காக வீட்டிலிருந்து கடைக்குச் சென்ற சமயமே மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் இவரைப் பலமாக மோதி கீழே வீழ்த்தினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய சிப்பாய் புலிகளிடம் சரண்!
### கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைப்பு

நகரப்பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றிலிருந்து தப்பிச்சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் நல்லூர் கோட்ட அரசியல் துறை அலுவலகத்தில் நேற்றுச் சரணடைந்தார்.

நலிமன விதானஹே வசந்த உபுல் குமார என்ற சிப்பாயே தப்பிச் சென்று அரசியல் துறையினரிடம் சரணடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக, மேலும் தெரியவருவதாவது, நெலும்வெல பொலநறுவையைச் சேர்ந்த உபுல் குமார 1996 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து தற்போது 514 ஆவது படைப்பிரிவில், லான்ஸ் கோப்ரல் தரத்தில் பணிபுரிந்து வந்தார். இன்னொரு இராணுவச் சிப்பாயுடன் ஏற்பட்ட தகராறின் போது அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார். எனவும் இதற்கான விசாரணைக்கு தான் அழைக்கப்பட்டதாகவும் மேற்படி சிப்பாய் தெரிவித்தார்.

இவர் தப்பி ஓடி நல்லூர் பகுதியிலுள்ள வீடொன்றில் சரணடைந்து தன்னை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு அமைய, நல்லூர் கோட்ட அரசியல் துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

பின்னர் யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டார். இந்த விடயம் தொடர்பாக யாழ்மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கும், யாழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசவிரோதக் குழு புலிகளிடம் பிடிபட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி- இலுப்பையடிச் சேனைப்பகுதியில் தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குழுவொன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் கைது செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கைத்துப்பாக்கிகள், கிரனைட்டுகள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பன மீட்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அண்மையில் தேசவிரோத செயல்களில் ஈடுபட்ட கருணா குழுவைச் சேர்ந்த ஏழுபேர் மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட இரு இடங்களில் வைத்து விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## யாழ்.நகரப் பகுதிகளில்

# வீதி ஒழுங்கை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## போக்குவரத்துப் பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதி வீதிகளில் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக நிறுத்துவோரின் துவிச்சக்கர வண்டிகள் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்படும் என யாழ். மோட்டார் போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அவர் - யாழ்நகரப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் பலர் தமது வாகனங்களை நிறுத்திச் செல்கின்றனர்.

அவ்வாறு வீதிகளுக்குக் குறுக்காக வாகனங்களை நிறுத்திச் செல்வோர் மீது நாம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து உள்ளோம். பல ஹையேஸ் வாகனங்கள், லொறிகள் அண்மைக்காலமாக நீதிமன்றில் தண்டப்பணம் செலுத்தும் வகையில் எம்மால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேபோல் - துவிச்சக்கர வண்டிகளும் வீதியோரங்களிலோ அல்லது வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாகவோ நிறுத்தப்படுமானால் அவை பொலிஸாரால் கட்டாயமாக அகற்றப்படுவதுடன், சிலவேளை நீதிமன்றில் தண்டப்பணம் செலுத்த வேண்டியும் வரலாம். எனவே,பொது மக்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை பாதுகாப்பு நிலையங்களிலோ அல்லது போக்குவரத்துக்கு இடையூறற்ற இடங்களிலோ நிறுத்தி வைக்கவேண்டும்.

கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன் துறை வீதி முதலான நகரப் பகுதி வீதிகளில் இவ்வாறு சைக்கிள்களைக் கண்டபடி நிறுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ப)

### இளைஞன் படுகாயம்

வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்றவர் லொறியுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் வீதி, அரசடியில் இடம்பெற்ற இந்த விபத்தில் உடுவிலைச் சேர்ந்த கந்தசாமி புளோரியர் (வயது 19) என்னும் இளைஞரே விபத்தில் படுகாயமடைந்தவராவார். (ப)

## ஏமாற்றி இறக்கப்பட்ட ஈழ அகதிகள் நெடுந்தீவில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்!

நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக இந்தியா சென்றிருந்த 22 பேர் நேற்று நெடுந்தீவிற்கு வந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் நோக்கிப் புறப் பட்ட இவர்கள், படகோட்டிகளால் நெடுந்தீவு அம்மா ஓடைப்பகுதியில் இறக்கி விடப்பட்டனர்.

இவர்கள் தம்மைப் படகோட்டிகள் ஏமாற்றிவிட்டதாகவும், நம்மிடமிருந்து தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் பெற்றுக்கொண்டு விட்டு, தலைமன்னார் எனத் தெரிவித்து நெடுந்தீவில் இறக்கி விட்டுச்சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

இவர்களில் 20 பேர் மன்னாரையும் இருவர் வவுனியாவையும் சொந்த இடங்களாகக் கொண்டவர்கள்.

இவர்கள் பொலிஸ் மற்றும் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.செயலகத்துக்கு இன்று அழைத்துவரப்படவுள்ள இவர்கள் யாழ்.செயலகத்தின் ஊடாகச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வீதி விளக்குகள் அமைப்பது குறித்து கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் வீதி விளக்குகள் அமைப்பதற்கென பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வதற்கான அவசர கூட்டம் இன்று பிரதேசசபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (91)

## போலிச்சான்றிதழ் அச்சிட்ட சம்பவம்

# சந்தேக நபர்களில் ஒருவர் பிணையில் விடுதலை!

அரியாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து சட்டவிரோதமான முறையில் போலிச்சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை அச்சிட்டமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சட்டவிரோதமாக போலி ஆவணங்களை அச்சிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தில்லையம்பலம் செல்வராஜா என்பவரை 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 2 லட்சம் ரூபா பெறுமதியான லிகிதர் தரத்துக்கு குறையாத அரச ஊழியர் ஒருவரது சரீரப் பிணையிலும் செல்வதற்கு யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அனுமதித்தார்.

இதேசமயம் - குறிப்பிட்ட வழக்கின் முக்கிய சந்தேக நபரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மானிப்பாய் பிரதேசசபை ஏற்பாட்டில்

# வலி.தென்மேற்கு பகுதியில் விசர் நாய்களுக்கு தடுப்பூசி!

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட நான்கு இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி நான்கு தினங்கள் ஏற்றப்படவுள்ளன.

இன்று முதல் கட்டுடை கிராம சேவையாளர் அலுவலகம் மற்றும் மானிப்பாய் பட்டினசபையில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும், நாளை ஆனைக்கோட்டை பிரதேச சபையின் உப.அலுவலகத்தில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும் -

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு-பிரான்பற்று முருகமூர்த்தி கோவிலில் காலை 8 மணி முதல் 10.30 வரையும், சாந்தை பிள்ளையார் கோவிலில் மதியம் 1 மணி முதல் 2.30 வரையும் தடுப்பூசி ஏற்றப்படும்.

அத்துடன், எதிர்வரும் 15 ஆம் திகதி சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும், சுதுமலை சனசமூக நிலையத்தில் 11.30 மணி முதல் 1.30 மணி வரையும் நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும். (91)

### கிணற்றில் விழுந்து பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுள் தவறி வீழ்ந்த வயோதிபப் பெண் நீரினுள் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

சண்டிலிப்பாய் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் சுந்தரம்பிள்ளை லக்சுமி (வயது 64) என்பவரே மரணமானார். நீர் அள்ளுவதற்காக கிணற்றடிக்குச் சென்ற வேளை - கிணற்றினுள் தவறிவீழ்ந்து இவர் மரணமடைந்தார்.



தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் பெண் மனநோயாளர் ஓய்வு கூடமொன்று யாழ்.மருத்துவபீட 21 ஆம் அணியின் குழு 1 இன் முயற்சியினூடாக புனரமைக்கப்பட்டது. இதற்கான நிதியுதவியை சுன்னாகம், கொமர்ஷல் வங்கி சார்பாக அதன் முகாமையாளரினால் பேராசிரியர் தயாசோமசுந்தரத்திடம் கையளிப்பதைக் காணலாம்.

## வைத்திய அதிகாரியின்பழிவாங்கல்

# விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க சுகாதார அமைச்சுக்கு கடிதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியின் பழிவாங்கல் நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடு குறித்து உடன் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரியை தனிப்பட்ட காரணங்களுக்காக மாவட்ட வைத்திய அதிகாரி தனது செல்வாக்கைப் பிரயோகித்து மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்துள்ளார்.

இதனை எதிர்த்து யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் சுகாதார வைத்திய அதிகாரியால் மனித உரிமை மீறல் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதுகுறித்து இதுவரை சரியான விளக்கம் சுகாதார அமைச்சினாலோ, யாழ்.போதனா வைத்தியசாலையினாலோ வழங்கப்படாததை அடுத்தே நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கருதப்படும் பழிவாங்கல் நடவடிக்கை தொடர்பான விசாரணையை உடன் மேற்கொண்டு அதற்குத் தகுந்த விளக்கத்தை 21 நாட்களுக்குள் அளிப்பதுடன், பழிவாங்கப்பட்டவருக்கு தகுந்த பரிகாரம் செய்யப்படுதல் வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

## வீதி விளக்குகள் பொருத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கவில்லை!

### மின்சாரசபை அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

நிகொட் ஒதுக்கிய நிதி கிடைக்காததால் வீதி விளக்குகள் பொருத்தும் பணி தாமதமடைவதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள வீதியோர மின்விளக்குகள் பல பயனின்றி இருப்பதால், பல வீதிகள் இருளில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், பல வீதிகளில் மின்விளக்குகள் அமைக்கப்படாத நிலையில் பொதுமக்கள் பெருஞ்சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனால், நிகொட் நிறுவனம் இந்த ஆண்டுக்கான தனது குடாநாட்டு அபிவிருத்திப் பணிகளில் ஒன்றாக யாழ்.மாவட்டத்தில் புதிய வீதியோர மின் விளக்குகளை நிறுவுதல் மற்றும் ஏற்கனவே இருக்கின்ற மின்விளக்குக் கம்பங்களை நிர்மாணித்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்காக 50 லட்சம் ரூபா வரை ஒதுக்கப்பட்டது.

இந்தப்பணம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நிகொட அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றபோதிலும், இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய அலுவலக அதிகாரி ஒருவரிடம் இது குறித்துக் கேட்டபோது அவர் அவ்வாறு பணமெதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும், அந்தப்பணம் கிடைத்தால் தாம் பணிகளை விரைவாக ஆரம்பிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.மாநகரசபை மற்றும் பிரதேசசபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பன இந்த மின் விளக்குக் கம்பங்களை அமைப்பதற்கான விபரங்களைச் சேகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### சுகாதாரப் பரிசோதகர்களால் மாட்டிறைச்சி அழிப்பு

வடமராட்சிப் பகுதியில் உள்ள மாட்டிறைச்சிக்கடை ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த தரமற்ற மாட்டிறைச்சியை நெல்லியடி பொது சுகாதார பரிசோதகரும் , வல்வெட்டித்துறை பொதுசுகாதார பரிசோதகரும் சேர்ந்து அழித்தனர்.

தற்போது கால்வாய் நோயினால் தென்மராட்சியில் மாடுகள் பாதிக்கப்பட்ட நிலையில் தென்மராட்சியிலுள்ள மீசாலைக் கிழக்குப்பகுதியில் இருந்து கடந்த 24 ஆம் திகதியன்று இறைச்சிக்காக வெட்டப்பட்ட மாடு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்க்கது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த கில்லி

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHTREMITIEH (சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
சூர்யா, ஜோதிகா, விவேக் மற்றும் பலர் நடித்த பேரழகன்

09.07.04 முதல் வானவில்
காட்சிநேரம்:-10.30,2.30,6.30 (பு.நே)
(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், அமோகா, பூஜா, தாமு நடித்த ஜெ ஜெ

(சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


## இருதய நோயாளிக்கு உதவுங்கள்

### செல்வி பேரம்பலம் கலைமகள் மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.



இருதய நோயினால் பாதிக்கப்பட்ட பே.கலைமகள் (வயது 21) என்னும் யுவதியின் உயிர்காப்பு நிதியத்துக்கு உதவுமாறு கோருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்த யுவதியை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளுமாறு டாக்டர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் -

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ள இரண்டு லட்சம் ரூபா செலவாகு மென தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த இந்த யுவதியின் வைத்தியச்செலவுக்கு நிதியுதவி வழங்க விரும்புவோர் -

**செல்வி கலைமகள் பேரம்பலம்,**
**சேமிப்புக்கணக்கு இல: 19990,**
**இலங்கை வங்கி,**
**சாவகச்சேரி.**

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோருகின்றனர்.

(சி/2747)

பொ சன நூலகம்

# கடற்கண்காணிப்பை அதிகரிக்கவே அமெரிக்கா கப்பலை வழங்கியதாம்!

## கடற்படை அதிகாரி தெரிவிப்பு

வடக்கு - கிழக்கில் கடற்கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காகவே - இலங்கைக்கு 'கரேஜஸ்' என்ற கப்பலை அமெரிக்கா வழங்கியது என கடற்படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கரேஜஸ கப்பலின் திருத்த வேலைகள் தொடர்பான பயிற்சிகள் இலங்கைக் கடற்படையின் பொறியியலாளருக்குக் கடந்த சில தினங்களாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கப்பலின் திருத்த வேலைகள் முடிவடைந்த பின்னர் - எதிர்வரும் நவம்பர் மாதமளவில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதும், வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் கடற்பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# தேர்தல் சட்டங்களை மீறிய ஆயிரம் பேர் கைதாகினர்!

தேர்தல் சட்டத்தை மீறி, பிரசாரம் மேற்கொண்டார்கள் எனத் தெரிவித்து, மாகாணசபை வேட்பாளர்கள் ஐம்பது பேர் உட்பட கட்சிகளின் ஆதரவாளர்கள் சுமார் ஆயிரம் பேர்வரைக் கடந்த நான்கு வாரங்களில் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகப் பொலிஸ் தேர்தல் செயலகப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

வேட்பாளர்களில் அநேகமானோர் கைதுசெய்யப்பட்டது - மேல்மாகாணத்தில் எனவும், அவர்களில் 12 வேட்பாளர்கள் வெலிக்கடை பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 75 வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அவற்றில் 25 அரச வாகனங்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்காணிப்புக் குழுவின்மீது ரில்வின் சில்வா பாய்ச்சல்!

## உல்லாசக்குழு என்றும் கண்டனம்



(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு - தனது பங்களிப்பைச் சரியான முறையில் செய்யவில்லையென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

கண்காணிப்புக்குழு தனது பணியைச் சரியான முறையில் நிறைவேற்றவில்லை என்பதனை நாம் தெளிவாகவே கூறுகின்றோம். சொல்லின் அர்த்தத்தில் அவர்கள் கண்காணிப்புக்குழு என்று பெயர் வைத்திருக்கலாம். ஆனால், அவர்கள் எந்தவித செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.

கண்காணிப்புக் குழுவினர் கண்டுபிடித்த விடயம் எவற்றையும் அறியக்கூடியதாகவில்லை. அத்துடன், சமாதான முயற்சி தொடர்பில் நடுநிலையாகச் செயற்பட்டது குறித்தோ காணக்கிடைக்கவில்லை.

அரசுக்கு அனுகூலமாகச் செயற்படுவதை விடுத்து, விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுவதிலேயே அவர்கள் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் நோர்வே அரசிடமே, கண்காணிப்புக்குழு தொடர்பான விடயங்களை ஒப்படைத்ததால், பிழையான நிலைமைகள் தோற்றம் பெற்றன.

கண்காணிப்புக் குழுவினர் என்பதைவிட, அவர்கள் சுற்றுலாக் குழுவினர் போன்று செயற்பட்டிருக்கின்றார்கள். கொழும்பிலுள்ள முதற்தர ஹோட்டல்களில் தங்கியிருந்து கொண்டு, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களுக்குச் செல்வதாகக் கூறி, படையினருடன் தொடர்புடைய இடங்களுக்குச் செல்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தேவையான இடங்களுக்குச் செல்வதற்கான வசதிகளை வழங்குகின்றனர். ஆனால், இவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

சிலவேளைகளில், விடுதலைப் புலிகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாகச் சட்டரீதியான அரசுக்குப் பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கு, முயற்சிக்கின்றமையைக் காணமுடிகின்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளில் நாம் திருப்தியடையவில்லையென நாம் எப்பொழுதும் கூறி வந்துள்ளோம்.

இந்தக் குழு மாற்றப்படவேண்டும் என்பதனையும் நாம் வலியுறுத்துகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (தே)

# ரத்ன சிறியின் நியமனத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் மனு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரத்ன சிறி விக்கிரம நாயக்க, விஜயுதாச ராஜபக்ஷ ஆகியோரின் நியமனங்கள் தேர்தல் சட்டத்தை மீறுவதாக அமைந்துள்ளது என்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுனந்த தேசப்பிரியா என்பவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக ரத்னசிறி விக்கிரம நாயக்கவும், விஜயதாச ராஜபக்ஷவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுவில் அல்லது தேசியப்பட்டியலில் இடம்பெறாத இவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமித்தது - சட்டத்தை மீறுவதாக அமைந்துள்ளதென்றும், அவர்களின் நியமனங்களை ரத்துச்செய்யக் கோரியுமே இந்த மனுத் தாக்கல் செய்யபட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சலீம் மர்சூக், கே.சிறிபவன் ஆகியோர் இந்த மனுவைப் பரிசீலித்த பின்பு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுக்குமாறும், எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் 2 ஆம் திகதி இவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பித்தனர்.

# நிதியுதவிக்கான கோரிக்கை ஜப்பான் அரசு நிராகரித்தது!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அமைப்பு ஒன்றினால் விடுக்கப்பட்ட நிதியுதவிக்கான வேண்டுகோளை ஜப்பான் நிராகரித்தது.

மக்கள் நம்பிக்கைக்கான மிலிந்த மொறகொடவின் நிலையம் என்ற பெயரிலான இந்தநிறுவனம், தமக்கான நிதியுதவியாக 4 லட்சத்து 345 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்குமாறு ஜப்பானிடம் கோரியிருந்தது.

இந்தநிறுவனத்தின் கீழ் வடக்கு - கிழக்கில் மிதிவெடியகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள இரண்டு இந்திய நிறுவனங்களுக்கான செலவாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்த அராசாங்க வட்டாரங்கள், குறிப்பிட்ட இரு இந்திய மிதிவெடியகற்றும் நிறுவனங்களும், சர்வதேச தரத்தைக் கொண்டிராமை காரணமாகவே நிதியுதவிக்கான கோரிக்கையை ஜப்பான் நிராகரித்துள்ளதாகவும் தெரிவித்தன.

# புலி உறுப்பினர் எனக்கூறி நகைகள் திருடியவர் கைது!

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்து, தங்க நகைகளைத் திருடிய இளைஞரொருவர் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவரெனத் தெரிவித்து, அடையாள அட்டை ஒன்றைக் காண்பித்ததுடன், கொல்ல செய்யப் போவதாக மிரட்டி, 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடியவரைத் தடுப்புக்காவலில் வைக்குமாறு வத்தளை மேல் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.விஜிய வர்த்தன பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர், பேதுருப்பிள்ளை ஜஸ்ரின் - விமலகுமார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தேக நபர் வத்தளை குடா இரண்ட பகுதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்று, தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருப்பதாகக் கூறி, போலி அடையாள அட்டையைக் காண்பித்து, கொலை செய்வதாக அச்சுறுத்தி, வீட்டிலிருந்தவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளைப் பறித்துக்கொண்டு, முச்சககர வண்டியொன்றில் தப்பிச்செனறதாக வத்தளைப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். (தே)

# இருதலை நாகங்களுடன் இணைந்து சந்திரிகா எப்படி ஆட்சி நடத்துகிறார்?

## கேள்வி எழுப்புகிறார் விக்கிரமபாகு கருணாரட்ண

நாட்டை முன்னேற்றுவது குறித்து, ஜனாதிபதி சந்திரிகாவுடன் காலையில் கலந்துரையாடல்களை நடத்தும் ஜே.வி.பியினர், மாலையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினருடன் இணைந்து இனவாதம் பரப்பும் பேச்சுக்களைப் பேசுகின்றனர்.

இவ்வாறான இருதலை நாகங்களுடன் அரசினைக் கொண்டு செல்லமுடியுமா என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேள்வியெழுப்பினார்.

சமாதானம், ஒற்றுமை மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் புதிய இடதுசாரி முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் - வெல்லம்பிட்டியவில் இடம்பெற்றபோதே, கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

ரணிலுடைய சமாதான வேலைத் திட்டத்தைக் குழப்பிவிட்டு, சந்திரிகா ஜே.வி.பி.யுடன் இணைந்து இனவாதத்தைத் தூண்டி அதிகாரத்துக்கு வந்தார். ஆனால், இன்று சமாதானத்துக்கு விருப்பமெனச் சந்திரிகா கூறுகிறார்.

சமாதானத்தை ஏற்படுததாமல் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கையில் புனர் நிர்மாணத்தை ஏற்படுத்தாமல் நாட்டை முன்னேற்ற முடியாது.

சமாதானத்துக்காக சந்திரிகா தனது கரத்தை உயர்த்துவது நல்லது. சமாதானத்தின் பொருட்டு நடவடிக்கை எடுப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

ஆனால், சமாதான முயற்சியை முன்னெடுக்க ஜே.வி.பி ஜனாதிபதிக்கு இடம் தருமா? பொருட்களின் விலையைக் குறைக்க, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க, தேசத்தின் வளங்களைப் பாதுகாக்கவெனக்கூறி, ஜே.வி.பி. தெருவில் இறங்குமானால் நாமும் ஆதரவினை வழங்குவோம்.

ஆனால், இனவாதத்தைத் தூண்டுவதை எம்மால் அனுமதிக்க முடியாது. சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதன்மூலமே, நாடாளுமன்றில் அதிக பலத்தைப் பெறமுடியும். சமாதானத்தின் ஊடாகவே, தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகளை அரவணைக்க முடியும். இன்று நாடாளுமன்றம் மற்போரின் மத்திய நிலையம்போல் ஆகிவிட்டது. மக்களின் பிரச்சினைகள் அங்கு பேசப்படுவதில்லை.

புலிகள் அமைப்பு சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை ஆலோசனை நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (தே)

### தேர்தல் கடமைகளில் ஒன்றரை இலட்சம் பேர் ஈடுபடுவர்

எதிர்வரும் பத்தாம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் கடமையில் - ஒன்றரை இலட்சம் பேரைச் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்தது.

ஆறு மாகாண சபைகளுக்கு நடைபெறும் தேர்தல்களில், ஒவ்வொரு மாவட்டங்களிலும் கடமைகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களின் விபரப்பட்டியல் தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும் தேர்தல் ஆணையாளர் அலுவலக சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்களின் தொகைக்கேற்ப அந்தந்த மாவட்டங்களில் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் தொகை வேறுபடுமெனவும், கொழும்பு, கம்பஹா போன்ற மாவட்டங்களுக்கு, ஒரு மாவட்டத்துக்கு 15 ஆயிரம் பேர்வரை கடமையில் ஈடுபடுவரெனவும், மற்றைய மாவட்டங்களில் பத்தாயிரம் பேர்வரை கடமையில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# மக்கள் இணையுமாறு கோரினால் ஆளும்கட்சியுடன் சேர்வோம்!

## ஆறுமுகம் தொண்டமான் கூறுகிறார்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் இணையுமாறு மக்கள் கோரினால், அரசுடன் இணைவதற்கு தாம் தயாராக இருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கட்சியின் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. எனினும், எமது கட்சியின் நோக்கம் மக்களுக்கு சேவை செய்வதே.

அரசுடன் இணைவதற்கு விரும்பினால், நான் நாளைக்கே கட்சியுடன் இணைந்து, சில சிறப்புரிமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால், மக்களின் கருத்துக்களுக்கு அமையவே சேவை செய்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் எப்போது இணைவீர்கள் என ஊடகவியலாளர்கள் என்னிடம் கேட்கின்றனர். ஆனால், நான் அரசுடன் இணைவது பற்றி எனக்கு மட்டும் தான் தெரியும்.

அரசின் பெரும்பான்மைக்கு மேலும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் இணைந்து கொள்வது எப்போது என்பது எமக்குத் தெரியும். அது மக்கள் அரசுடன் இணையுமாறு கோரினால் மட்டுமே எனவும் தெரிவித்தார். (தே)



# அடுத்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி தடுமாறும்!

## மத்யூ ஹெய்டன் கூறுகிறார்



கெய்ன்சில் நடைபெறவிருக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில இலங்கை அணி நிச்சயம் தடுமாறும் என்று அவுஸ்ரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்யூஹெய்டன் தெரிவித்தார்.

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையேயான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட முதல் போட்டி டார்வினில் கடந்த வாரம் நடைபெற்றது. இதில் 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்ரேலியா வெற்றிபெற்றது.

இந்த நிலையில் வரும் வெள்ளிக்கிழமை கெய்ன்ஸில் ஆரம்பமாகவிருக்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணி தடுமாறும் என்று, ஹெய்டன் தெரிவித்தார். ஏனெனில் கெய்ன்ஸ் ஆடுகளமானது வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் அவுஸ்ரேலிய அணி இந்த டெஸ்டில் ஆதிக்கம் செலுத்தும் என்று ஹெய்டன் கூறினார்.

இது குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த ஹெய்டன் -

2 ஆவது டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ள கெயன்ஸ் ஆடுகளமானது வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். எனவே, இந்த ஆடுகளம் இலங்கை அணி விரும்பும்படியாக இருக்காது. கெய்ன்ஸ் ஆடுகளமானது எங்களுடைய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமையும். மெக்ராத், கஸ்பரோவிச், கிலெஸ்பி ஆகியோர் இந்த டெஸ்டில் நிச்சயம் பிரகாசிப்பார்கள். ஏனெனில் இந்த மூவருமே நல்ல நிலையில் உள்ளனர் என்று கூறினார்.

டார்வினில் நடைபெற்ற முதல் டெஸ்டில் மெக்ராத் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதனால் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் அவர் 4 ஆவது இடத்திற்கு முன்னேறினார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி உலகசாதனை படைத்துள்ள முரளிதரனின் சாதனையை (527) முறியடிக்க ஷேன்வோனுக்கு இன்னும் 8 விக்கெட்டுக்கள் தேவை என்ற நிலையில் அவர் 2 ஆவது டெஸ்ட்டில் களம் இறங்குகிறார்.

## கங்கூலி, டெண்டுல்கருக்கு வருடாந்தம் 60 லட்சம் சம்பளம்

இந்திய வீரர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் வழங்க இந்திய கிரிக்கெட் சபை முடிவுசெய்துள்ளது. இதற்காகக் கடந்த மாதம் கிரிக்கெட் சபை கூடி ஆலோசனை செய்துள்ளது.

இதில் இந்த மாதம் இலங்கையில் நடைபெறும் ஆசிய கிண்ணப் போட்டியில் ஆடும் வீரர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி வீரர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். இதில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ள வீரர்களுக்கு ஆண்டுக்கு ரூபா 60 லட்சமும், 'பி' பிரிவில் இடம்பெறும் வீரர்களுக்கு 30 லட்சமும், 'சி' பிரிவினருக்கு ரூபா 15 லட்சமும் வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அணியின் முன்னணி ஆட்டக்காரர்களான கங்கூலி, டெண்டுல்கர், ராகுல்ராவிட், கும்ளே, ஷேவாக், லக்ஷ்மன் ஆகியோர் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் ஆண்டுக்கு ரூபா 60 லட்சத்தைச் சம்பளமாகப் பெறுவார்கள். கிரிக்கெட் சபையின் இந்த அறிவிப்பை முன்னாள் கிரிக்கெட் வீரர் கபில்தேவ் வரவேற்றுள்ளார்.




# யூரோ - 2004 ஐ வென்று: கிரீஸ் சாதனை படைத்துள்ளது

## பயிற்சியாளர் பெருமிதம்

ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன் பட்டத்தை வென்றதன் மூலம் கிரீஸ் அணி புதிய வரலாறு படைத்துவிட்டதாக அந்த அணியின் பயிற்சியாளர் ஓட்டோ ரெகாஜெல் தெரிவித்தார்.

போர்த்துக்கலில் நடைபெற்றுமுடிந்த 16 அணிகள் கலந்துகொண்ட யூரோ 2004 உதைபந்தாட்டச் சம்பியன் போட்டியின் இறுதிப் போட்டியில் - கிரீஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

ஐரோப்பாவில் இருக்கும் உதைபந்தாட்ட அணிகளில் வலுக்குறைந்த அணிகளில் ஒன்றான கிரீஸ் அணி பிரசித்திபெற்ற யூரோ கோப்பையை வென்றதன்மூலம் உதைபந்தாட்ட வரலாற்றில் புதிய சாதனை படைத்தது.

கிரீஸ் அணியின் இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் அந்த அணியின் பயிற்சியாளர் ஓட்டோ ரெகாஜெல் ஆவார். ஜேர்மனைச் சேர்ந்த இவரது பயிற்சியின் கீழ் பிரர்ன்ஸ், செக் குடியரசு போன்ற வலுவான அணிகளைக் கிரீஸ் வீழ்த்தியுள்ளது.

இறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணி தோல்வியடைந்ததற்கு அந்த அணியே முக்கிய காரணம் ஆகும். கிரீஸ் அணியின் வலுவான தடுப்பு ஆட்டத்தை ஊடுருவத் தவறியதே போர்த்துக்கல் அணியின் தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும்.

இந்த வெற்றி குறித்து 65 வயதான ரெகாஜெல் கூறுகையில் -

இந்த வெற்றி ஒரு அற்புதமான வெற்றி. இந்த நாள் கிரீஸ் உதைபந்தாட்டத்தினதும் ஐரோப்பிய உதைபந்தாட்டத்தினதும் மிக முக்கியமான நாளாகும். இறுதிப் போட்டியில் கிரீஸ் அணி முழுப்பலத்தையும் பயன்படுத்தி விளையாடியது.

இதன்மூலம் புதிய வரலாறையும் கிரீஸ் அணி படைத்துவிட்டது. ஏதென்ஸிற்கு நாங்கள் திரும்பும்போது அளிக்கப்படவுள்ள வரவேற்பு நிகழ்ச்சிகளை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லையென்று கூறினார்.

# செக் குடியரசு வீரர் பரோஸ் 5 கோல் அடித்து சாதனை!



போர்த்துக்கல் நாட்டில் நடந்து முடிந்த ஐரோப்பிய கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அதிக கோல்களை அடித்தவர் என்ற பெருமையை செக்குடியரசின் வீரர் பரோஸ் பெற்றார்.

இவர் 5 போட்டிகளில் விளையாடி 5 கோல்களை அடித்தார்.

செக்குடியரசு இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்று இருந்தால் பரோஸ் இன்னும் அதிகமாக கோல்கள் அடித்திருப்பார். 1984 ஆம் ஆண்டு நடந்த யூரோ கிண்ணப் போட்டியில் பிரான்ஸ் வீரர் பிளாட்டினி அதிக பட்சமாக 9 கோல்கள் அடித்திருந்தார்.

5 கோல்கள் அடித்த செக் குடியரசு வீரர் பரோஸுக்கு 'தங்கக் காலணி' விருது வழங்கப்பட்டது. பரோஸுக்கு அடுத்தபடியாக இங்கிலாந்து வீரர் ரூனி (4 ஆட்டம்) ஹொலன்ட் வீரர் வான் நிஸ்டல்ருயி (5 ஆட்டம்) ஆகியோர் தலா 4 கோல்கள் அடித்தனர்.

கோல் அடித்தவர்களின் விபரம் வருமாறு-

5 கோல்: பரோஸ் (செக் குடியரசு), 4 கோல்: ரூனி (இங்கிலாந்து), வான் நிஸ்டல் ரூயி (ஹொலன்ட்), 3 கோல்: லம்பார்ட் (இங்கிலாந்து), லார்சன் (சுவீடன்), தொம்சன் (டென்மார்க்), ஷிடேன் (பிரான்ஸ்), ஏஞ்சலோ சாரிஸ்டீஸ் (கிரீஸ்), 2 கோல்: ரூயி கோஸ்டா, மணிச்சே, ரொனால்டோ (3 பேரும் போர்த்துக்கல்), கேசனோ (இத்தாலி), ஹென்றி (பிரான்ஸ்), ஹெனின் (செக் குடியரசு), இப்ராஹிம் மோவிக் (சுவீடன்), கோ[illegible] (செக் குடியரசு).

33 வீரர்கள் தலா ஒரு கோல் அடித்தனர்.

# ஐ.சி.சி. சுப்பர் தொடர் போட்டி அடுத்த ஆண்டு அவுஸ்ரேலியாவில்

(அவுஸ்ரேலியா)

சர்வதேச கிரிக்கெட் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய 'மெகா' போட்டியான ஐ.சி.சி. சுப்பர் தொடர் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

3 ஒரு நாள் போட்டிகள், 6 நாட்கள் டெஸ்ட் போட்டி கொண்ட, உலக வீரர்கள் அணி பங்குபெறும் ஐ.சி.சி சுப்பர் தொடர் போட்டி அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ளது.

அடுத்த ஆண்டு ஒக்ரோபர் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டியை நடத்த - இந்தியா, தென்னாபிரிக்கா இரு நாடுகளும் வேண்டுகோள் விடுத்திருந்தன. 1992 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபையின் சார்பாக அவுஸ்ரேலியாவில் நடைபெறும் முதற்போட்டி இதுவாகும். இந்திய அணியின் சார்பாக உலக வீரர்கள் அணியில் சச்சின், ட்ராவிட், கங்கூலி ஆகியோர் பங்குபெற வாய்ப்புள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்ரேலிய அணி முதலிடத்தில் இருப்பது ஏறக்குறைய உறுதியான நிலையில் இந்தப் போட்டியை அவுஸ்ரேலியாவில் நடத்த இதுவே போதுமான காரணம் என்று கிரிக்கெட் நிர்வாகி சுதர்லாண்ட் கூறினார்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஒருநாள் போட்டித் தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் அணியுடன் உலக அணி அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5 ஆம், 7 ஆம், 9 ஆம் திகதிகளில் விளையாடவுளளது.

டெஸ்ட் போட்டியில் தர வரிசை முதலிடத்தில் இருக்கும அணியுடன் ஒக்ரோபர் 14 ஆம் திகதி சிட்னியில் நடைபெறவிருக்கும் 6 நாள் டெஸ்ட் போட்டியொன்றில் உலக அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள உலக அணி விசேட தேர்வுக் குழுவினால் தெரிவுசெய்யப்படவுள்ளது.

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறும் இடங்கள்

(லண்டன்)

2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான ஆட்டங்களின் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. கடந்த உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்றது. இதில் இந்தியாவை வென்று அவுஸ்ரேலியா சம்பியன் பட்டம் வென்றது.

அடுத்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவில் நடைபெறவுள்ளது. இதில் போட்டியை நடத்த மேற்கிந்தியத் தீவுகளைச் சுற்றியுள்ள 12 நாடுகள் விண்ணப்பம் செய்தன. அவற்றை ஏற்று போட்டி நடைபெறும் இடங்களை ஐ.சி.சி. ஆய்வு செய்தது. அதன்படி 8 இடங்களில் போட்டியை நடத்துவதாக அறிவித்துள்ளது.

போட்டி நடைபெறும் இடங்கள் வருமாறு-

அன்டிகுவா, பார்படாஸ், கயானா, ஜமேக்கா, செயின்கிட்ஸ், செயின்லூசிகா, டிரினிபாட், குயின்ஸ்பார்க் .

உலகக் கிண்ணப் போட்டியில் - 16 நாடுகள் பங்கேற்கின்றன. மொத்தம் 51 ஆட்டங்கள் நடைபெறும். மேற்கிந்தியத் தீவுகளில் முதன்முறையாக உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. அந்த அணி 1975, 1979 ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கரும்புலிகள் நினைவாக முல்லைத் தீவில் நடத்தப்பட்ட நீச்சல் போட்டி



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இளையோர் தேசிய விளையாட்டு விழாவின் போது...



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இளையோர் தேசிய விளையாட்டு விழாவின் போது...



28. இலங்கையின் மிகப்பெரிய மாவட்டம் எது?
(1)யாழ்ப்பாணம் (2)அனுராதபுரம் (3)கொழும்பு
(4)வவுனியா (5)கிளிநொச்சி

29. இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் தேசியப் பட்டியல் ரீதியாகத் தெரிவுசெய்யப்படுபவர்கள் எண்ணிக்கை யாது?
(1)225 (2)29 (3)160 (4)36 (5)190

30. இலங்கையில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?
(1)யால (2)வில்பத்து (3)குமண
(4)தெஹிவளை (5)பின்னவெல

31. இலங்கையில் முதல் வெளிவந்த சிங்களப் பத்திரிகை எது?
(1)சிங்களஹட (2)உதயதாரகை (3)கொழும்பு ஜேனல்
(4)ராவய (5)சண்டே ரைம்ஸ்

32. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொத்மலைத் திட்டத்துக்கு நிதி வழங்கும் நாடு எது?
(1)சுவீடன் (2) பிரித்தானியா (3) ரந்தெனிகல
(4)ஜேர்மனி (5)ஜப்பான்

33. டொனால்ட் ரம்ஸ் பீல்ட் என்பவர் ஒரு நாட்டின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் ஆவர். இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
(1)ரஷ்யா (2)அமெரிக்கா (3)இந்தியா
(4)பாகிஸ்தான் (5)பிரிட்டன்

34. சர்வதேச மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுவது எத்தினத்தில்?
(1)டிசம்பர் 1 (2)டிசம்பர் 2 (3)டிசம்பர் 10
(4)டிசம்பர் 18 (5)ஒக்டோபர் 10

35. அருகில் காட்டப்பட்டுள்ள குறியீடு போக்குவரத்தில் குறிப்பது?
(1)இடமிருந்து வலம் வாகனம் முன்னால் இணைகிறது.
(2)இடப்பக்கம் பாதை உள்ளது.
(3)வலப்பக்கம் பாதை திரும்புகிறது.
(4)வலமிருந்து வரும் வாகனம் முன்னால் இணைகிறது.
(5)இரட்டை வண்டிப்பாதை முன்னால் முடிவடைகிறது.



36. பொதுநலவாய அமைப்பின் தற்போதைய செயலாளர் யார்?
..........

37. விண்வெளிக்குச் சென்ற முதலாவது விண்வெளி வீரர் யார்?
..........

38. 1994 ஆம் ஆண்டில் வியாழன் கோளுடன் மோதிய வால்வெள்ளியின் பெயர் என்ன?
..........

39. போலியோ சொட்டு மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
..........

40. இலங்கையில் சினிமாத்துறையில் பொன்விழா ஆண்டு எத்தனையாம் ஆண்டு கொண்டாடப்பட்டது?
..........

41. பூகம்பத்தை அளக்கப் பயன்படும் அலகு யாது?
..........

42. கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
..........

43. சுதந்திரத்திற்கான நீண்ட பயணம் எனும் நூலை எழுதியவர் யார்?
..........

44. கவிஞர்களின் கவிஞன் என அழைக்கப்படும் ஆங்கிலக் கவிஞர் யார்?
..........

45. சமாதானத்துக்கு வெண்புறாவைப் பயன்படுத்திய ஓவியர் யார்?
..........

46. லில்லிப்பூக்களின் நாடு என அழைக்கப்படும் நாடு எது?
..........

47. அமெரிக்க இராணுவத் தலைமையகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
..........

48. இலங்கையில் நேரமாற்றம் கடைசியாக எத்தனையாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?
..........

49. உலக சாதனை புத்தகம் கின்னஸ் எத்தனையாம் ஆண்டு முதல் வெளிவருகின்றது?
..........

50. உலக இணைய நாடு என அழைக்கப்படுகின்ற நாடு எது?
..........

# பொது உளச்சார்பு

01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள நான்கு சொற்களில் ஒரு சொல் ஏதோவொரு காரணத்தால் ஏனைய மூன்று சொற்களுடனும் பொருந்துவதில்லை. அச்சொல்லைத் தெரிந்தெடுத்து நிழற்றுக.

1. (1)காயம் (2)யாக்கை (3)சரீரம் (4)புயம்
2. (1)அகழி (2)மார்க்கம் (3)கிடங்கு (4)கேணி
3. (1)வாரணம் (2)கேசரி (3)குஞ்சரம் (4)மாதங்கம்
4. (1)பொழில் (2)அடவி (3)கான் (4)ஆரணியம்
5. (1)தோத்திரம் (2)மாத்திரம் (3)கோத்திரம் (4)சத்திரம்

06 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டிருக்கும் நான்கு கூற்றுக்களில் மூன்று கூற்றுக்கள் எளிய சிந்தனையாக இருக்கும் அதேவேளை மற்றைய கூற்று ஒரு முடிவாகும். அம்முடிவைத் தெரிந்து எடுக்கவும்.

6. (1)எமது பயணம் நாம் நினைப்பதைக் காட்டிலும் தாமதமாகும்.
(2)வீதியில் வாகனங்கள் அதிகமாகும்.
(3)எனது காரில் ஒரு பொறிமுறைக் குறைபாடும் உண்டு.
(4)மூடுபனி காரணமாக வீதி தெளிவாக இருக்கவில்லை.

7. (1)நான் எலியின் மணத்தை உணர்கின்றேன்.
(2)எனது நூலக அறையில் ஓர் எலி இருக்கின்றது.
(3)ஓர் எலி எனது நூல்களில் சிலவற்றைச் சேதப்படுத்தியுள்ளது.
(4)எனது நூலக அறையின் கதவு எப்போதும் திறந்திருக்கிறது.

8. (1)இனிப்புப் பொருட்களைச் சாப்பிடுவதற்கு ஒவ்வொருவருக்கும் விருப்பமுண்டு.
(2)பற்சிதைவு பிள்ளைகளிடம் அதிகளவில் காணப்படுகின்றது.
(3)நீரிழிவு நோய் இளைஞர்களிடையே பரவுகின்றது.
(4)இனிப்புப் பொருட்களை உண்ணுதல் நோய்கள் பலவற்றுக்கு அடிப்படைக் காரணமாகும்.

9. (1)சோறு உண்பதற்கு மகளுக்கு விருப்பமில்லை.
(2)உறைப்புச் சாப்பாடு சாப்பிடுவதற்கும் மகளுக்கும் விருப்பமில்லை.
(3)இன்று இரவு உணவுக்காக நூடில்ஸ் தயாரிக்க வேண்டும்.
(4)எளிய உணவுகளைச் சாப்பிடுவதற்கு மகளுக்கு விருப்பம் உண்டு.

10. (1)சில மணித்தியாலங்களில் மகன் வருவான்.
(2)நண்பகல் உணவைத் தயாரிப்பதற்கு எனக்கு இரண்டு மணித்தியாலங்கள் தேவை.
(3)மகன் வீட்டுக்கு பசியுடன் வருவான்.
(4)மகள் வீட்டுக்கு வரும் முன்பாக கடைக்குப் போய்வருதற்கு நேரம் போதாது.

11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலம் எண்களின் கொலத்தை விளங்கி வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிக.

11. [0.1] [0.11] [0.19] [0.46] [1.1] [2.35] [........]
(1) 2.51 (2) 4.51 (3) 3.51 (4) சரியாகக் கூறுமுடியாது.

12. [T | 7] [P | 11] [L | 15] [D | 23] [B | .....]
(1) 2 (2) 23 (3) 16 (4) 25

13.


(1) 15 (2) 3 (3) 51 (4) 5

14.


(1)322 (2)313 (3)530 (4)511 *(தொடரும்...)*

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

1. முதல் இரண்டு படங்களுக்குப் பொருத்தமான படத்தை ஏனைய மூன்று படங்களிலிருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.




| 7 | 2 | 6 | 1 | 5 | 8 | 3 | 9 | 0 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| த | வெ | ன் | ளி | பொ | ள் | அ | ழா | மு | வி |
|  | | | | | | | | | |
| L | A | I | C | N | P | D | R | G | O |

2. இலக்க வரிசையில் முதலாவது இலக்கத்தையும் இறுதி இலககத்தையும் கூட்டினால் வரும் இலக்கம் யாது?
..........

3. இலக்கங்களில் இரு இலக்கங்களைப் பெருக்கினால் பெறப்படும் மகக் கூடிய தொகை யாது? ..........

4. 8965168227 இவ்இலக்கம் கொண்டு வரும் ஆங்கிலச் சொல் எது?
..........

5. நான்முகி, கனவுரு, சதுரமுகி ஆகிய மூன்றையும் சேர்த்தால் ஒரு மிருகத்தின் பெயர் ஆங்கிலத்தில் வரும் அது எது?
..........

6. ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் மேலுள்ள ஆங்கிலக் குறியீடுகளைப் பயன்படுத்தி இரகசிய முறையில் பொருட்களின் விலைகளைக் குறித்துள்ளார் அவ்வாறாயின் -
வானொலிப் பெட்டியின் விலை = PNGG.GG இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது. வானொலிப் பெட்டியின் விலை என்ன? ..........

7. கடலில் பயணம் செய்யும் ஒருவன் தனது இடப்பக்கத்தில் சூரியன் மறைவதைக் கண்டான். அவன் பயணம் செய்யும் திசை யாது?

பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றும் சில கோலங்களுக்கமைய எண்கள் எழுதப்பட்டுள்ளன. அக் கோலங்களை இனங்கண்டு வெறறிடங்களில் வரவேண்டிய எண்களை எழுதுக.

8.


A= 8
B =
C =
D =
E =



F=7
G =
H=
I=
J =

பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக் கொண்ட கூற்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

9. எப்பணி செய்யும் போது இறைவனின் பெயர் சொல்லத் தொடங்கு
(1) வேலை - கடமை (2) புகழ் - இகழ்
(3) தொழில் - உச்சரிப்பு (4) கருமம் - நாமம்

10 மாணவர்களின் எதிர்காலம் அவர்களின் ஆற்றலில் தங்கியுள்ளது?
(1) இறந்தகாலம் - முயற்சி (2) வருங்காலம் - படிப்பு
(3) வருங்காலம்- திறன் (4) நிகழ்காலம் - அபிவிருத்தி

பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய வாக்கியத்தைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

11. காந்தன் ஒரு பேச்சாளன் அவன் பாடசாலையில் மிகவும் கெட்டிக்காரன் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினான். அவனைப்பற்றிக் குறிப்பிடும் மிகப் பொருத்தமான சொல்
(1) கெட்டிக்காரன் (2) சகலகலாவல்லவன்
(3) நல்லவன் (4) அறிவாளி

12. தருமரெட்ணம் நல்ல குணமுள்ளவர். சொன்னபடி நடப்பவர் வாக்கு மாறாதவர். ஊரில் அவ னை மெச்சினார்கள். அவனைக் குறிப்பிடும் பொருத்தமான சொல்
(1) மரியாதைக்குரியவன் (2) கைராசிக்காரன்
(3) பொய் சொல்லாதவன் (4) நாணயமானவன்

13. முதலாவது படத்திற்குப் பொருத்தமான படத்தை மற்றைய படங்களில் இருந்து தெரிவு செய்து கீறிடுக.




14. பின்வரும் பிரச்சினையில் முதல் கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்குப் பதிலாக ஈடுபடுத்தக் கூடிய எண்களைக் கொண்ட கூட்டைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
54 = [18 - 6] = 25x2=10
(1) 6=1 (2) 6=2 (3) 6x1 (4) 6-1

JULY 2004

| Mon | Tue | Wed | Thu | Fri | Sat | Sun |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

மேலுள்ள தகவலைக் கவனமாக அவதானித்து விடை தருக.

15. இம் மாதத்தில் உள்ள பாடசாலை வாரங்கள் எத்தனை?
..........

16. விசேட விடுமுறை தவிர்ந்த ஏனைய வார விடுமுறை நாட்கள் எத்தனை?
..........

17. 16 ஆம் திகதி என்ன விடுமுறை நாள்?
..........



மேலுள்ள பாதையில் குறிப்பிட்டுள்ள குறியீட்டுக்குரிய விளக்கங்களை கீழே எழுதுக.

18. (அ) (ஆ)

19. (இ) (ஈ)

20. கீழுள்ள முத்துமாலைகளை அவதானிக்கவும்.



16 14 12 18

(அ) மாலைகளிலுள்ள முத்துக்களின் மொத்த எண்ணிக்கை?

.....................................................................

(ஆ) ஒவ்வொரு மாலைகளின் முத்துக்களின் தொகைக்கேற்ப இறங்கு வரிசைப்படுத்துக?

.....................................................................

பின்வரும் படங்கள் நமக்கு எதனை உணர்த்துகின்றன?

21 22 23



பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைக் கீழுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

24. நீலம், மஞ்சள் ஆகிய நிறங்களைக் கலந்தால் உண்டாகும் நிறம். (சிவப்பு, ஊதா, பச்சை, மஞ்சள்) (................)

25. PHI என்ற குறியீட்டால் அழைக்கப்படுவது (வைத்திய அதிகாரி, மருத்துவர், பொலிஸ் அதிகாரி, சுகாதாரப் பரிசோதகர்) (..................)

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

26. வளர்ப்பு மீன் தொட்டியொன்றை தூக்கிக் கொண்டு வந்த 5 ஆம் தரம் மாணவன் வீட்டினுள் தொட்டியைப் போட்டு உடைத்து விட்டான். அவன் மீன்களைக் காப்பாற்றச் செய்யவேண்டிய முதலாவது செயற்பாடு யாது? ....................................

.....................................................................




27 இது எதனைக் காட்டுகிறது? ....................................

28. இச் செயற்பாட்டை விளக்குக? ....................................

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

29. மகளின் வயது 10 வருடம் 5 மாதம். தாயின் வயது மகளைவிட 15 வருடம் 6 மாதம் அதிகமானது.

இருவரினதும் வயதுகளின் கூட்டுத் தொகை யாது? ..................

30. ஒருவன் நீரோடுகின்ற திசையில் மணிக்கு 20 கி.மீ. தூரமும், நீர் ஓடும் திசைக்கு எதிர்த்திசையில் மணிக்கு 10 கி.மீ. தூரமும் படகில் சென்றான். நீரோட்டம் இல்லாத நீரில் மணிக்கு எவ்வளவு தூரம் செல்வான்?

.....................................................................

31. ஒரு பண்ணையில் 200 ஆட்டுக்குட்டிகள் உள்ளன அவற்றுள் 75 கடா ஆடுகள், 20 மலட்டு ஆடுகள். ஏனைய ஆடுகள் இரு குட்டிகளை ஈன்றவை எனில், எத்தனை ஆட்டுக்குட்டிகள் உள்ளன?

.....................................................................

கீழுள்ள கணிதச் செய்கையைப் பயன்படுத்தி கீழுள்ள எழுத்துகளின் பெறுமதியைக் காண்க.

A = C+C B = A+C A+B+C = 36

32. (i) A யின் பெறுமதி என்ன? (ii) B யின் பெறுமதி என்ன?

.....................................................................

33.

(iii) C யின் பெறுமதி என்ன? (iv) A+B யின் பெறுமதி என்ன?

.....................................................................

இரகசிய மொழியில் எழுதப்பட்டுள்ள சொற்களை அவதானியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| த | 1 | க | த | 1 | | | = | திகதி |
| ப | 2 | ப | 3 | ப | 2 | | = | பாப்பா |
| த | 1 | வ | ர | ம | 3 | | = | தாவரம் |

மேலே தரப்பட்டுள்ளதைப் போன்று கீழ்வரும் ரகசிய மொழிக்குரிய சொல்லைக் கண்டு பிடித்து எழுதுக.

34.

(i) த 2 த 3 த 2 = ....................................

(ii) ச 1 ங 1 கம 3 = ....................................

35 (i) ம 2 ண 3 க 3 கம 3 = ....................................

(ii) ச 2 ந 3 தி1 = ....................................

36



(அ) இந்த மணிக்கூட்டின் நேரம் என்ன?

....................................

(ஆ) பிரியஙகாவின் இந்த மணிக்கூடு 13 நிமிடம் முந்தி ஓடுகிறது. என வைத்துக் கொள்வோம். உண்மையான நேரம் என்ன?

.....................................................................

37 அருகில் உள்ள குடத்தினுடைய துண்டு உடைந்து விட்டது. அந்த உடைந்த துண்டுக்குப் பொருத்தமான துண்டைக் கண்டுபிடித்துக் கோடிடுக.




கிழே தரப்பட்ட வாக்கியங்களில் கூறப்பட்டுள்ளவை சரியானவையாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அமைப்புக்குள் இடுக.

38. செம்பு, இரும்பு, அலுமினியம் போன்ற உலோகப் பொருட்கள் மின்னைக் கடத்தும். (.........)

39 காந்தம் எல்லாவகையான பொருட்களையும் கவரும்.

**T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்**

இங்கே மடிக்கவும்



# ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை- 2004

**மாதிரி வினாத்தாள்**

தொகுப்பு - தவசேகர் B.Sc

## பொது அறிவு

**எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1. 2001 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் 208 உறுப்பினர்களின் ஆதரவுடன் சுதந்திர ஆணைக்குழுச்சட்டம் உருவாக்கப்பட்டது. இது அரசியல மைப்பின் எத்தனையாவது திருத்தச் சட்டமாகும்?
(1)13 ஆவது (2)14 ஆவது (3)15 ஆவது (4)16 ஆவது (5)17 ஆவது

2. சைப்பிரஸ் எனும் இடத்தில் விடுமுறையைக் கழித்துக்கொண்டு இருந்த போது இருதய மாற்றுச் சிகிச்சையின் முன்னோடி இறந்தார். அவர் யார்?
(1)பெபேட்டவுலிங் (2)கிறிஸ்ரியன் பேனாட் (3)லமன்கிறே (4)கிபோகிறற்றிஸ் (5)எட்லேட்

3. கோபி அனானுக்கும், ஐ.நா. சபைக்கும் 2001 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. எவ்விடயம் தொடர்பாக வழங்கப்பட்டது?
(1)மருத்துவம் (2)சமூகம் (3)பொருளாதாரம் (4)சமாதானம் (5)பொதுச்சேவை

4. நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராகப் போராடும் குழு எது?
(1)ஹமாஸ் (2)அல்குவைதா (3)மாலோ (4)குர்திஸ் (5)யுனிட்டா

5. உலக வர்த்தக மையம் அமைந்துள்ள இடம்
(1)வாஷிங்டன் (2)நியூயோர்க் (3)மொன்றியல் (4)ஒட்டாவா (5)மெல்போர்ன்

6. 04.04.2001 இல் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு ...ன் உறுப்புரிமையை இழந்த நாடு எது?
(1)அமெரிக்கா (2)ரஷ்யா (3)பிரிட்டன் (4)தென்னாபிரிக்கா (5)இந்தியா

7. ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுக்களை 19 ஓட்டங்களுக்குப் பெற்று உலக சாதனையை ஏற்படுத்திய வீரர் யார்?
(1)முரளிதரன் (2)ஷேன்வோர்ன் (3)சமிந்தவாஸ் (4)அனில்கும்ளே (5)மெக்ராத்

8. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கடல் விமானத்தில் வந்திறங்கிய இடம் எது?
(1)கனகராயன்குளம் (2)கிளிநொச்சி (3)மாங்குளம் (4)இரணைமடு (5)முல்லைத்தீவு

9. மத்திய கிழக்குப் பிரச்சினை என்பது இஸ்ரேல். பாலஸ்தீன பிரச்சினையாகும். இப்பிரச்சினை தீவிரமடைய இஸ்ரேல் பிரதமர் ஓர் காரணகர்த்தா ஆவார். தற்போதைய இஸ்ரேல் பிரதமர் யார்?
(1)யசீர் அரபாத் (2)தாபோபெகி (3)நெல்சன் மண்டேலா (4)ஏரியல்ஷேரோன் (5)நெத்தன்யாகு

10. 20.06.2001 ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா. வால் கொண்டாடப்படும் தினம் யாது?
(1)அகதிகள் தினம் (2)புத்தகதினம் (3)தொழிலாளர் தினம் (4)விவசாய தினம் (5)சுற்றுச்சூழல்தினம்

11. 25.01.2001 ஆம் ஆண்டில் பெருமளவு காட்டுத்தீ பரவிய நாடு எது?
(1)இந்தோனேசியா (2)அவுஸ்ரேலியா (3) தாய்வான் (4)இந்தியா (5)பாகிஸ்தான்

12. 15.02.2002 ஆம் ஆண்டில் 200 ஆண்டை நிறைவு செய்யும் அரச வெளியீடு எது?
(1)வர்த்தமானி (2)ஹன்சாட் (3)தினகரன் (4)சிவப்புப் புத்தகம் (5)நீலப்புத்தகம்

13. மக்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக ஆஜென்ரீனாவில் ஜனாதிபதிகள் அடிக்கடி மாற்றப்பட்டனர். இந்த நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைக்குக் காரணமான அந்த நாட்டு நாணயம் எது?
(1)டொலர் (2)டினார் (3)பெசோ (4)ஜென் (5)மார்க்

14. யுத்த நிறுத்தம் வேண்டும், சமாதானம் உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தும் பிரசார நடவடிக்கையின் பெயர் என்ன?
(1)வெண்புறா நடவடிக்கை (2)ஸ்ரீலங்கா பெஸ்ற் (3)புரிந்துணர்வு உடன்படிக்கை (4)பொங்கு தமிழ் (5)சர்வோதய உடன்படிக்கை

15. யூரோ மண்டலத்தில் கடைசியாக இணைந்த நாடு எது?
(1)டென்மார்க் (2)சுவீடன் (3)பிரிட்டன் (4)துருக்கி (5)கிரீஸ்

16. உலகின் முன்னணி தொழில்வள நாடுகள் 7 ஐச் சேர்ந்து ஜீ-7 அமைப்பு உருவாக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டில் இன்னோர் உறுப்பு நாடு சேர்த்துக் கொள்ளப்பட்டு ஜீ-8 என்ற அமைப்பாக மாறியது. இறுதியாகச் சேர்ந்த நாடு எது?
(1)அமெரிக்கா (2)இந்தியா (3)ஜப்பான் (4)ரஷ்யா (5)சீனா

17. புதிய மிலேனியத்தில் பிறந்த குழந்தைகளுக்காக இலங்கை வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 500 பெறுமதி கொண்ட வைப்பு நிதித்திட்டத்தின் பெயர் என்ன?
(1)பொன் அரும்பு (2)பொற்கனக்கு (3)இசுரு (4)ரிதிரேகா (5)பரிசுதியத்திட்டம்

18. மெக்கோ தீவுகள் 19.12.1999 ஆம் ஆண்டில் சீனாவிடம் கையளிக்கப்பட்டது. இந்தத் தீவு யாருடைய காலனித்துவத்துக்குள் இருந்தது?
(1)ஒல்லாந்தர் (2)பிரித்தானியர் (3)ஜேர்மானியர் (4)பிரான்சியர் (5)போர்த்துக்கேயர்

19. கிறீன் பீஸ் (Green Peace) என்பது
(1)ஒருவகை மீன் இனம் (2)விண்வெளியில் உள்ள உரு (3)குளிர்சாதனப்பெட்டி நிறுவனம் (4)சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் (5)காட்டி விளையாட்டுடன் தொடர்புடையது

20. உலகில் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் வைரஸ் நோய் எது? இது எத்தனையாம் ஆண்டு ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது?
(1)பிளேக் 1960 (2)தொழுநோய் 1975 (3)போலியோ 1990 (4)பெரியம்மை 1980 (5)பெரியம்மை 1995

21. 1999 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நிறுவனம் எது?
(1)I.C.R.C (2)U.N.I.C.E.F (3)U.N.H.C.R (4)W.H.O (5)M.S.F

22. அப்பிள், நோவெல், வாங் என்பன குறிப்பது
(1)தொலைபேசி வகை (2)இனிப்பு வகை (3)கணினி நிறுவனம் (4)அமெரிக்க நிறுவனம் (5)பேனா வகைகள்

23. சித்திரத்தின் மூலவர்ணங்கள் எவை?
(1)சிவப்பு, கறுப்பு, பச்சை (2)சிவப்பு, நீலம், பச்சை (3)சிவப்பு, மஞ்சள், நீலம் (4)கறுப்பு, சிவப்பு, நீலம் (5)மஞ்சள், சிவப்பு, வெள்ளை

24. King Queen, Bishop, Sholder, Knight என்னும் பதக்கங்கள் எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?
(1)Cricket (2)Cards (3)Chees (4)Foot Ball (5)Pink Ponk

25. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமாக நாஸா புத்தாயிரமாம் ஆண்டை எவ்வாண்டாகப் பிரகடனப்படுத்தி உள்ளது?
(1)சனி நூற்றாண்டு (2)செவ்வாய் நூற்றாண்டு (3)குளோனிங் நூற்றாண்டு (4)பசுமை நூற்றாண்டு (5)அறிவியல் நூற்றாண்டு

26. 815434270 V என்பது ஒருவருடைய தேசிய அடையாள அட்டை இலக்கமாகும். பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - இவ் இலக்கத்துக்குரியவர் பெண்
B - இவர் பிறந்த திகதி 12 ஆகும்.
C - இவர் பிறந்த மாதம் 5 ஆகும்
இக் கூற்றுக்களுள் சரியானது
(1)A,B (2)A,C (3)B,C (4)A,B,C (5)கூறமுடியாது

27. ஜப்பான், அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் போன்ற நாடுகளின் பணவகைகள் முறையே
(1)பிராங், பவுன், ரூபிள், ஜென், டொலர்
(2) ரூபிள், பவுன், ஜென், டொலர், பிராங்
(3) டொலர், ஜென், பிராங், பவுன், ரூபிள்
(4)பவுன், ஜென், பிராங், பவுன், டொலர்
(5)ஜென், பிராங், டொலர், ரூபிள், பவுன்

# வாழ்வுரிமையைக் கேட்ட எம் மக்களுக்கு சிங்கள தேசம் சாவுரிமையே கொடுத்தது!

## கரும்புலிகள் நாள் நிகழ்வில் அமுதாப்



(திருகோணமலை)

ஆயிரமாயிரம் மில்லர்களும், அங்கையற்கண்ணிகளும் உருவாக வேண்டுமா, இல்லையா என்பதனை பேரினவாத சிங்கள தேசமே தீர்மானிக்கவேண்டும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடந்த கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சாள்ஸ் அன்ரனி படையணியின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

வாழ்வுரிமை கேட்ட எமது மக்களுக்கு சிங்கள தேசம் கொடுத்ததெல்லாம் சாவுரிமையே. உலகில் ஈழத்தமிழர் விட்ட கண்ணீர் அளவிடக்கரியது. புலிகளாகிய நாம் எங்கும் போவோம், எதனையும் செய்வோம். எங்களால் செய்யமுடியாததென்று எதுவுமில்லை.

அவலத்தைத் தந்தவனுக்கே அதே அவலத்தைத் திருப்பிக் கொடு. இது எமது தேசியத் தலைவரின் தாரக மந்திரம். மனித இனமொன்று சந்திக்கக்கூடாத அனைத்தையும் எமது இனம் சந்தித்தது. இதற்கு யார் காரணம்? சிங்கள பேரினவாதமே ஆகும். நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல. மாறாக சிங்கள தேசத்தில் சம்பளம் பெற்று போராடுகின்ற கூலிப் படைகளுக்கு மட்டுமே எதிரானவர்கள்.

வாழ்வின் பிரச்சினைகளின் தீர்வுக்காக இரண்டு முறைகள் உண்டு. ஒன்று பணிந்து போவது. மற்றையது துணிந்து போவது. நாம் துணிந்து போகின்றவர்கள். தமிழராகிய நாம் என்றும் நிமிர்ந்து, துணிந்து போகின்றவர்கள். நாம் எப்போதும் பணிந்து போகமாட்டோம்.

850 நாட்களாக சிறந்த அரசியல் சாணக்கியத்தைக் காட்டியும். நாம் துயரப்பட்டுவருகின்றோம். போரியலில் மட்டுமல்ல அரசியல் சாணக்கியத்திலும் நாங்கள் சிறந்தவர்கள் என்பதை 850 நாள் போரற்ற அமைதிச் சூழலில் இலங்கை தேசத்துக்கும், சர்வதேசத்துக்கும் உணர்த்தி இருக்கின்றோம்.

இலங்கை மக்களின் வாழ்வும், தாழ்வும் எங்கள் கைகளிலேயே உள்ளது. தமிழினம் நிதியும், உறுதியுமான தீர்வைப்பெறும். அன்றுதான் சிங்கள தேசமும் நிம்மதியுடன் இருக்கவேண்டும்.

சமாதான காலத்தில் சாவையும் இரத்தத்தையும் சுமக்க நாங்கள் சாக்கடைப் புழுக்களல்ல. நாங்கள் 1948 ஆம் ஆண்டுத் தமிழர்களல்ல. 2004 ஆம் ஆண்டுத் தமிழர்கள். எங்கள் இராணுவ பலத்திலேதான் எங்கள் வாழ்வும், வளமும் தங்கியிருக்கின்றது.

இந்த வகையில் இந்த மாவட்டத்தில் தற்கொடைப் போராளிகளாக, கரும்புலிகளாகத் தியாகம் செய்த 18 திருமலை வாழ் கரும்புலிகளை நினைவுகூருகிறோம். அவர்களுடைய தியாகம் என்றும் வீணாகாது, வீரயமாகாது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

எனவே, இங்கு கூடியிருக்கின்ற ஒவ்வொரு தமிழ்மகனும் தங்களால் இயன்றவரை இந்த வாழ்வும், பலத்துக்குமான தங்களது பணியைத் தொடர்ந்து செய்யவேண்டும். சமாதானத்தில் மட்டுமல்ல போரிலும் எங்களால் காரியங்களைச் செய்து முடிக்கமுடியும் என்பதை சிங்கள தேசத்துக்கும், இராணுவத்துக்கும், சர்வதேசத்துக்கும் நாங்கள் ஏற்கனவே உணர்த்தியிருக்கின்றோம்.

தொடர்ந்தும் உணர்த்துவோம். சமாதான காலத்தில் விளையாதது போரினால் விளையுமென்றால், அதனையும் சந்திக்க நாம் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்தார். (04) (10)

### சத்தியசாயி சேவை வாரம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவினால் கடந்த 2 ஆம் திகதி முதல் சாயி சேவா வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த காலத்தில் பல சேவைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இறுதி நிகழ்வுகள் எதிர் வரும் 11 ஆம் திகதி காலை முதல் யாழ்.சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறும். (111)

### மருத்துவசேவை பாதிப்பு

(அழியவளை)

பூநகரி அரசினர் வைத்திய சாலையில் நிரந்தரமாக வைத்தியர் இல்லாத காரணத்தினால் மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமைபுரியும் ஏனைய வைத்தியர்களே இங்கு ஒரு சில நாட்கள் கடமைபுரிகின்றனர்.

தற்போது இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

### ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் புதிய காரியாலயம் ஒன்று கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் காணப்படும் இயன் மருத்துவர்களின் பற்றாக்குறையை நீக்கும் வகையில் இங்கு இயன் மருத்துவப்பிரிவும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (111)

### வேகக்கட்டுப்பாட்டை மீறிய சாரதிகளுக்கு அபராதம்

(யாழ்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை மீறி வாகனம் செலுத்திய இருவருக்கு யாழ். நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். நகர எல்லைக்குள் வேகக் கட்டுப்பாட்டை மீறி மிக வேகமாக வாகனம் செலுத்திய சாரதிக்கும், வட - பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கும் சொந்தமான பஸ்ஸை முந்திச் செல்வதற்காக, மிகவேகமாக மினி பஸ்ஸைச் செலுத்திய சாரதிக்குமே இந்தத் தண்டப்பணம் செலுத்தும் தண்டனையை யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விதித்தார்.

இதன்படி இவர்கள் தலா ஆயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்தினர்.

### பருத்தித்துறை பிரதேச சபைக்கு செயலாளர் நியமனம்

பருத்தித்துறை பிரதேச சபை செயலாளராக சி.பசுபதி இந்த மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கரவெட்டி பிரதேச சபைச் செயலாளராக கடமை புரிந்தவர்.

இதேவேளை பருத்தித்துறையின் பிரதேச சபையின் செயலாளராக கடமைபுரிந்த அ.அநடராசா வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்துக்கு இடம்மாற்றப்பட்டுள்ளார். (122)

# தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் திருப்பங்களை ஏற்படுத்தியவர்கள் கரும்புலிகளே

## பரிசளிப்பு நிகழ்வில் துணைவேந்தர் மோகனதாஸ்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் போராட்ட வரலாற்றில் பெரும் திருப்பங்களையும், வெற்றிகளையும் பெற்றுத் தந்தவர்கள் கரும்புலிகள் என, யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சர்வதேச தமிழ் மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவுப் போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது -

கரும்புலிகளின் அர்ப்பணிப்பே வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் இன்று ஓரளவாவது கௌரவத்துடன் வாழ்வதற்கும், மற்றைய இனத்தவர்கள் எம்மைச் சீண்டிப்பார்க்க எண்ணாது விலகி நடப்பதற்கும் காரணம்.

மில்லருடன் ஆரம்பமான கரும்புலிகளின் பட்டியல் இன்று மிகவும் பெரிதாக வளர்ந்துள்ளது. மனிதன் சுயநலம் மிக்கவனாக வாழ்பவன். அதிலும் தமிழர் மத்தியில் இந்தத் தன்மை அதிகம். இந்த நிலையில் தமிழர் போராட்ட வரலாற்றில் உதித்த இந்தத் தற்கொடையாளர்களின் தியாகம் என்பது எண்ணிப்பார்க்க முடியாததொன்றாகும்.

அரசாங்கம் தனது கோரிக்கையில் முதன்மையானதாக இந்தக் கரும்புலிகள் படையை - புலிகள் இல்லாதொழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதற்குக் காரணம், கரும்புலிகளின் பலம் ஆயுதங்களுக்கு அப்பாற்பட்டது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டமையே ஆகும்.

பெற்றோர், சகோதரர் என்ற இறுக்கமான கட்டுக்கோப்புக்குள் தமிழ் இளைஞர் மத்தியில் அதாவது, பாசவலைகளைத் தாண்டித் தம்மை தியாகம்செய்து இந்த நாட்டில் தமிழர் வாழ்வதற்கு வழி செய்த அந்த தியாகிகளை ஒரு போதும் நாம் மறக்கக் கூடாது என்றார்.

**இளம்பரிதி**

*(யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்)*

எம்மை அழிக்க சிங்கள அரசு பல ஆயுதங்களைப் பயன்படுத்தியது. உலகம் முழுவதும் அழிவாயுதங்களை கொள்வனவு செய்து எம் மக்கள் மீது பாரிய யுத்த அழிவை ஏற்படுத்தியது. அவ்வேளை எமது தலைவனின் திட்டமிடலின்படி உயிராயுதமாக கரும்புலிப்படை உருவாக்கப்பட்டது.

அதன்மூலம் இராணுவத்தினர் புரிந்த கொடுமைகள், அடக்கு முறைகள் என்பன கட்டுப்படுத்தப்பட்டன. நாம் தனித்துவமான தலைவனையும், வலிமைகொண்ட படை வீரர்களையும் கொண்டுள்ளோம். இதனால், எமது இனம் அழிமைப்படப்போவதில்லை. எமது சுதந்திரம் உறுதியானது.

கரும்புலிகளின் தியாகம் உலக நாடுகளால் அதிசயித்து நோக்கப்படுகின்றது. அந்த நெருப்பு மனிதர்களின் தியாகம் தமிழீழ வரலாற்றில் உயர்ந்து நிற்கின்றது என்றும், எம் மக்களின் மனதில் நிறைந்துவிட்டவர்கள். இந்த தியாகிகள்.

வரலாற்று நாயகர்களான இவர்கள் வெற்றிபெற்ற மனிதர்கள். சாதாரணமான வெற்றிகள் அல்ல. மரணத்தை வென்று தியாகத்தின் உச்சத்தை தொட்டவர்கள் இந்தக் கரும்புலிகள் என்றார்.

**செ.கஜேந்திரன்**

*(நாடாளுமன்ற உறுப்பினர்)*

தமிழ் மக்களின் ஒற்றுமையும், உயர்வான இலட்சியப் போராட்டத்தின் வழியில் ஒன்று திரண்டு நிற்கும் தன்மையையும் தேர்தல் மூலம் வெளிப்படுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்து 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்களால் நாம் எதனையும் செய்துவிடமுடியுமென்றோ, தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்று விட முடியுமென்றோ கூறிவிட முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்தி கரும்புலி மறவர்களின் கனவை நனவாக்க போராட்ட வழியே சிறப்பானது.

நாம் நாடாளுமன்றில் தமிழர் மீதான அடக்குமுறைக்கெதிராகக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் போதே தமிழர்கள் தாக்கப்படுகின்றனர். தமிழ்ப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இவற்றைத் தடுப்பதற்குள் ஆயுதப் போராட்டமே சிறந்த வழி என்றார்.

**அர்ச்சனா**

*(தமிழ் மாணவர் ஒன்றியப் பிரதிநிதி)*

தமிழ் மாணவர்கள் சிங்கள இராணுவத்தினரால் திட்டமிட்ட முறையில் கலாசாரச்சீரழிவுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆனால், அவற்றை முறியடிக்கும் வகையில் தாமே சில அறிக்கைகளையும் விடுகின்றனர்.



எமது பாடசாலைகளை ஆக்கிரமித்து நின்றும், பெண்கள் பாடசாலைகள் முன்பாகக் காவலரண்கள் அமைத்து, எம்மைக் கேவலப்படுத்துமாற்போல் செயற்படும் இராணுவத்தினருக்கு எதிராக தமிழ் மாணவர்கள் கிளர்ந்தெழும் சூழல் உருவாகிக்கொண்டிருக்கின்றது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சில ஆண்டுகள் யாழ்.மண் அகப்பட்டிருப்பதால் எமது மாணவ சமூகம் தீய சக்திகளின் செயல்களுக்கு துணைபோய்விடக்கூடாது. எமது மண்ணில் நடைபெறும் தேச விடுதலைப்பற்று எம்மாணவர்களுக்கு மேலும் ஊட்டப்படவேண்டும் என்றார். (ப)



சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவு மண்டபத்தை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மனன் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (29)

## ஈ.பி.டியினர் தாக்கியதாக இளைஞர் மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

### அதிகாரிகளின் விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியினரால் தாக்கப்பட்டதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி.கென்சி என்பவரே நேற்றுமுன்தினம் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் வீதியால் சென்றுகொண்டிருந்த தன்னையும், தனது நண்பரையும் மோட்டார் சைக்கிளில் வந்துமோதிய ஈ.பி.டி.பி உறுப்பினர் தாம் நியாயம் கேட்ட போது தம்மைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர் : வி.விஷ்ணுஜன்

முகவரி : 'ஸ்ரீரங்கம்' கேணியடி கொக்குவில் மேற்கு

அரசியல் நோக்கு — சிலம்பு

# சமாதானமும், பொருளாதார மீட்சியுமா? யுத்தமும், அழிவுமா?

கொழும்பு அரசியல் எங்கு போய்க்கொண்டிருக்கிறது? எதிலே போய் இது முடியும்? என்பதுதான் இன்று எழும் கேள்வியாகும். அறுதிப் பெரும்பான்மை இல்லாத அரசு. எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கையோ அதிகம். ஆனால் ஜனாதிபதியின் தயவில் சிறுபான்மை அரசு தள்ளாடிக்கொண்டிருக்கிறது.

பெரும்பான்மையாக இருந்த ஆட்சியைக் கலைத்துவிட்டுத் தனது அரசியல் எதிர்காலம் ஒன்றையே கருத்தாகக்கொண்டு தேர்தலை நடத்தியவர் சந்திரிகா. ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியைப் பிடித்துவிட முயற்சித்தார் அவர்.

அந்த முயற்சி முழு வெற்றியை அவருக்குக் கொடுக்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இறுதிவரை காப்பாற்றி வைத்திருந்துவிட்டு, பதவியை விட்டு விலகமுடியாத பேராசையால் அதிகாரமுள்ள பிரதமராக வர அவர் எடுத்த முயற்சிகள் சறுக்கலாகவே இருக்கின்றன. இந்த நிலையில் எதிர்க்கட்சிகளைப் பார்த்து உங்களால் ஆட்சியமைக்க முடியுமா என சவால் விடும் அனுரா பண்டாரநாயக்க. இவர் அடுத்த ஜனாதிபதியாக தான் வரமுடியுமா என்று கனவு கண்டுகொண்டிருக்கிறார்.

இவ்வாறு அக்காவும் தம்பியும், திட்டம் போட்டுக்கொண்டிருக்க இவர்களின் கூட்டுப் பங்காளியான ஜே.வி.பி தனது வளர்ச்சியை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது.

இலங்கை அரசியலில் முன்பு வளர்ச்சி பெற்றிருந்த இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன 1964 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்தன் பின் செல்லாக் காசாக இன்று இருக்கின்றன.

தாயார் சிறிமாவோவுடன் கூட்டுச் சேர்ந்த அவர்கள் தனித்து நின்று அரசியல் செய்யமுடியாத நிலையில் மகள் சந்திரிகாவின் நிழலில் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இன்று உள்ளனர்.

லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட்டுக்களின் இடத்தைப் பிடித்துக்கொண்ட ஜே.வி.பி மெல்ல மெல்ல தன்னை வளர்த்துக்கொண்டு வருகிறன்றது.

ஜே.வி.பியின் மேல் வெறுப்புக் கொண்டிருந்தாலும் சந்திரிகாவின் தயவில் அரசியல் நடத்தும் முன்னைய இடதுசாரிகள் ஜே.வி.பியுடனான சந்திரிகாவின் இணைப்பை எதிர்க்கமுடியாமல் சந்திரிகாவுடன் சேர்ந்தே தேர்தலில் போட்டியிட வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர்.

ஜே.வி.பி மெல்ல மெல்ல சுதந்திரக் கட்சியின் வளர்ச்சியைத் தடுத்து தமது வளர்ச்சியை அதிகரித்து வருகின்றனர். அரசில் பங்குபற்றிக் கொண்டே அரசுக்கு எதிரானன நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

தற்பொழுது நடைபெற்றுவரும் பட்டதாரிகளின் போராட்டத்தை ஊக்குவித்து வருவது ஜே.வி.பி. அத்துடன் பொலிஸார் அப்பட்டதாரிகள் மேல் நடத்திய தாக்குதலைக் கண்டிப்பதும், ஆட்சியில் இருந்துகொண்டு ஆட்சிக்கெதிராகச் செயற்படுவதும் ஜே.வி.பியின் சாதுரியமாகும். பட்டதாரிகளுக்கு எதிரானவர்கள் சுதந்திரக் கட்சியினரே என்ற எண்ணத்தை ஏற்படுத்தி தனது வளர்ச்சியை அதிகரிக்க ஜே.வி.பி எடுத்த முயற்சியே இதுவாகும்.

இவ்வாறு தனது வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள ஜே.வி.பி- இனவாதத்தையும் அதற்குப் பயன்படுத்துகின்றது. நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிரியான ஜே.வி.பி புலிகளுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரம் வழங்குவதை முழுமூச்சாக எதிர்க்கிறது. ஜே.வி.பி தனது வளர்ச்சிக்காக இனவாதத்தை முதன்மைப்படுத்துகின்றது. இதுவே ஜே.வி.பியின் நிலை.

ஜே.வி.பி சிங்கள - பௌத்த பேரினவாதத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடுகின்ற வேளையில் அதற்கு இடைஞ்சலாக உருவெடுத்துள்ளது ஜாதிக ஹெல உறுமய. புதத பிட்சுக்களின் கட்சி எவரும் எதிர்பாராத நிலையில் இலங்கை நாடாளுமன்றத்தின் ஆட்சியாளர் யார் என்பதை தீர்மானிக்கின்ற எண்ணிக்கையுடன் இன்று உள்ளது.





சந்திரிகா ஜாதிக ஹெல உறுமயவை இழுத்து தனது ஆட்சியை உறுதிப்படுத்த எடுத்த நகர்வுகள் வெற்றியளிக்கவில்லை. ஜே.வி.பியினின் அனுகுமுறை சந்திரிகாவின் காய் நகர்த்தலுக்கு இடைஞ்சலாக அமைந்ததுதலும், ஜாதிக ஹெல உறுமயவில் சிறு விரிசல் ஏற்பட்டு நீதி மன்றம் வரை 'போய்' உள்ளது.

ஜாதிக ஹெல உறுமய இரண்டு பட்டிருந்தாலும், அவர்களின் ஒரே இலட்சியம் சிங்கள - பௌத்த தர்மராஜ்ஜியம் அமைப்பதேயாகும். அதாவது மனித தர்மம், புத்தரின் கோட்பாடுகளுக்கு மாறான பேரினவாத, மதவாத ஆட்சியை அமைப்பதே ஜாதிக ஹெல உறுமயவின் இலட்சியமாக உள்ளது. அவ்வே இனவாதமே இங்கும் மேலோங்கி நின்றது.

இந்த இனவாதத்திற்கு- ஈடு கொடுக்கவேண்டிய நிலையில் சந்திரிகாவின் சுதந்திரக் கட்சி உள்ளது. 1972 இல் சிங்கள - பௌத்த குடியரசு உருவாக்கி தமிழ்மக்களை இரண்டவத்தை வைத்து அடக்கியாளவும், இன ஒடுக்குமுறைளைப் பின்பற்றியது சிறிலங்கா சுதந்திரக் கட்சி.

தமிழ் இளைஞர்களைப் பிடித்து சிறைகளை நிரப்பி அவர்களை ஆயுதமேந்த வைத்ததும் சுதந்திரக் கட்சியே. அக்கட்சியின் வளர்ச்சியில் இனவாதமே என்றும் மேலோங்கி இருந்தது.

ஆயுதமற்ற அறப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை ஆயுதம் ஏந்த வைத்த முதல் சிங்கள அரசு சுதந்திரக் கட்சி அரசேயாகும். ஆனால், அந்தப் போராட்டத்தை நசுக்க அதற்குப் பயங்கரவாதம் என்று பெயர்சூட்டி உலகில் பரப்புரை செய்ததும் இந்த அரசே.

பின்னர் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக யுத்தம் செய்தததும் சந்திரிகா அரசுதான். அதாவது சண்டை மூலம் தமிழ்மக்களை அடக்கி, தான் விரும்பியதை தமிழ் மக்களுக்கு கொடுப்பதுதான் அவரின் சமாதானம். ஆனால் உலக நாடுகளின் நெருக்குதலால் இன்று ஏற்பட்டுள்ள நிலையில் எப்படி உலகநாடுகளை ஏமாற்றலாம் என்று திட்டம் போட்டு யுத்தமற்ற இன்றைய நிலையை நீடித்து தன்னை யுத்தத்துக்கு தயார்படுத்த முனைகிறார் சந்திரிகா.

கருணா என்னும் ஒருவரை வைத்து தமிழ்மக்களைக் கூறுபோட முனைந்த ஆட்சியாளர்கள் - இன்று கருணாவை வைத்து தென் தமிழீழத்தில் தமிழினப் பற்றாளர்களைக் கொலைசெய்து குழப்பநிலையை மேற்கொள்கின்றனர். ஆட்சியாளர்களின் இச்செயலுக்கு உடந்தையாக செயற்படுபவர்கள் இராணுவ அதிகாரிகளே.

கருணாவுக்கு உதவியதாகக் கூறி புலனாய்வுப் பொறுப்பாளர் பதவிநீக்கப்படுகின்றார். கருணா எங்கே என்று ஆட்சியாளருக்குத் தெரியாதாம். ஆனால் அமைச்சர் ஒருவர் கருணாவுடன் தொடர்பு வைத்திருப்பதை ஏற்றுக்கொள்கிறார். அவர் தொடர்ந்தும் அமைச்சரவையில் இருக்கிறார்.

அதாவது தமிழினத்தின் தேசிய எழுச்சியை எதிர்க்கும், காட்டிக்கொடுக்கும் கயவர்கள் ஆட்சியாளர்களால் அரவணைக்கப்படுவர். பேரினவாதிகளின் தந்திரம் இதுதான்.

அதாவது இனவாத அரசியல் சந்திரிகா அரசின் கைவந்த கலை. யுத்தத்தைத் தொடங்க சில வழிமுறைகளைக் கையாண்டுகொண்டு அப்பழியை விடுதலைப் புலிகள் மேல் போடுவதற்கு ஆயத்தமாகிறது சந்திரிகா அரசு.

எதிர்க்கட்சி வரிசையில் பெரிய கட்சி ஐ.தே.க கட்சியாகும். இதன் இனவாதக் கொள்கை மற்றவர்களுக்கு சளைத்ததல்ல. தமிழ் மண் அபகரிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை தமிழின ஒழிப்பில் தனது பங்களிப்பை முறையாகச் செய்த கட்சி ஐ.தே.கட்சியாகும்.

1977 இல் மிகப்பெரிய வெற்றி பெற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் காலம்தான் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிக்காலமாகும்.

1977 இல் ஆட்சியமைத்தவுடன் யாழ்.நகரம் எரியூட்டப்படுகின்றது, பேரினவாத வன்செயல் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. தொடர்ந்து 1981 இல் மீண்டும் பேரினவாத வன்செயல் யாழ்ப்பாண பொதுநூலகம் தீக்கிரை. மலையகத்திலும் தமிழ்த் தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

பின்னர் 1983 இல் உலகமே ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டது. அத்தகைய இன வன்செயல். இதன் பெறுபேறு - தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சி. 2002 இல் சிங்கள மக்கள் சமாதானம் வேண்டி ஆணை கொடுக்கிறார்கள் புலிகளுடன் பேசி பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு.

ஐ.தே.கட்சி தலைவர் ரணில் சமாதானம் பேசுகின்றார். உலக நாடுகள் சமாதானம் இத்தீவில் மலர வேண்டும் என்று பாடுபடுகின்றன. ஆனால், உலக நாடுகள் பங்குபற்றும் மாநாடுகளில் புலிக[illegible]கு அழுதம் கொடுத்து ஒரு அணுகுமுறைத் தீர்வை முன்வைக்கலாம் என்று ஐ.தே.கட்சி அரசு முனைகின்றது. புலிகள் என்றும் விழிப்பானவர்கள். அதனால் ரணிலின் திட்டம் எடுபடவில்லை.

புலிகள் தன்னாட்சி அதிகார சபை வேண்டும் என்று முன்மொழிந்த பொழுது ஆட்சி கவிழ்க்கப்பட்டு தேர்தல் வந்து சிறுபான்மை அரசு ஆட்சியிலுள்ளது.

சிங்கள மக்கள் யுத்தம் வேண்டுமென்று இம்முறையும் வாக்களிக்கவில்லை. ஆனால் சந்திரிகாவின் அரசோ அல்லது பங்காளிகளோ, தற்பொழுது சமாதானத்தில் நாட்டமில்லாதவர்களாக தம்மைக் காட்டிக்கொள்கின்றார்கள்.

எப்பொழுதும் பேரினவாத வன்செயலைத் தூண்டிவிடும் சிங்கள அரசுகள் இம்முறை அவ்வாறு வன்செயலை முடுக்கிவிட முடியாது. எனவே தமிழ்மக்கள் மேல் மீண்டும் யுத்தம் திணிக்கப்படலாம். அப்படியானால் நாடு அழிவுப்பாதையில் செல்வதை எவரும் தடுக்கமுடியாது.

சமாதானமும், பொருளாதார வளர்ச்சியுமா அல்லது யுத்தமும் பொருளாதார அழிவுமா என்பதைச் சிந்தித்து முடிவெடுக்கவேண்டியது சிங்கள மக்களுடைய பொறுப்பேயாகும். ✪

> *எப்பொழுதும் பேரினவாத வன்செயலைத் தூண்டிவிடும் சிங்கள அரசுகள் இம்முறை அவ்வாறு வன்செயலை முடுக்கிவிட முடியாது. எனவே தமிழ்மக்கள் மேல் மீண்டும் யுத்தம் திணிக்கப்படலாம். அப்படியானால் நாடு அழிவுப்பாதையில் செல்வதை எவரும் தடுக்கமுடியாது.*

---

தரிசனம் — நிஜன்

# மனிதம் வாழும் இதயங்கள்

மேலான மனிதப் பண்புகள் வசீகரம் மிகுந்தவை. மனித மனங்களை அவை எப்போதும் தொட்டு நெகிழ்த்தும் தன்மை உடையவை. பூச்சுக்களும், போலித்தனமான பாவனைகளும் மிகுந்த பொய்மைச் சூழலில் அவை உருவாவதுமில்லை, மிளிர்வதுமில்லை.

எளிமையும், உண்மையும் வெளிப்பாடுடையதுமான மனிதர்களிடத்தில் அத்தகைய பண்புகள் இயல்பாய் வெளிப்படும். அந்தப் பண்புகளையே நமது விழுமியங்களாய் ஏற்ற அந்த மனிதர்களை உலகத்தில் மனித ராசியின் தன்மைகளை தம்மகத்தே கொண்டு வாழ்பவர்கள். அத்தகையவர்களுடனான அனுபவங்களை மனசு மறப்பதேயில்லை.

எமது மண்ணில் நிகழ்ந்த மாபெரும் இடப்பெயர்ச்சி காலத்தில் அது தந்த அனுபவத்தைக் கண்டவர்கள் எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.



யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய அன்றைய நாளில் எனது சகோதரியின் கணவரின் எதிர்பார்ப்புகள் எழுதுமட்டுவாள் சென்றடைந்த அந்த நண்பரின் வீட்டுக்குச் சென்றபோது முற்றாய் உடைந்து போனது.

தேடிப்போன அந்த நண்பரின் வீட்டில் மட்டுமல்ல. அவரது உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் நண்பர்கள், உறவினர் என எத்தனை எத்தனையோ பேர் எனது சகோதரியின் குடும்பத்துக்கு முன்னரே அந்த இடங்களில் தஞ்சமடைந்திருந்தனர்.

எதிர்பார்த்து வந்தவர்களுக்கு உதவ முடியவில்லையே என்கின்ற துக்கம் அந்த நண்பருக்கு.

அவர் சலிக்கவில்லை. இவர்களது குடும்பத்தினரையும் ஏற்றுக்கொண்டு அந்த உழவு இயந்திரத்தில் இரவுப்பொழுது இன்னொரு இடம் நாடிப் புறப்பட்டனர். நீண்ட தூரப் பயண முடிவில் அவரது சகோதரி முறையானவரின் வீட்டைச் சென்றடைந்தனர். அதுவோ ஒரு சிறிய வீடு. நான்கு பிள்ளைகளும் தாயுமாக அவர்கள் அதில் வாழ்ந்து வந்தனர்.

உழவு இயந்திரத்தில் - பாரிச வாதத்தால் படுக்கையாகிவிட்ட என் தந்தை, இயலாதவரான என் தாயார் உட்பட 10 பேர் இருந்தார்கள். அந்த நண்பரின் சகோதரி இறுதியாகச் சொன்ன யோசனை எல்லோருக்கும் சரியெனப்பட்டது.

அவர்களின் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் ஒரு கோயில் பெரிய மண்டபமருகில் இரு பெரிய அறைகளைக்கொண்ட மடப்பள்ளி சேர்ந்தாற்போல ஒரு ஓலைக்குடிசை என இவர்களுக்குகே அமைக்கப்பட்டது போல காணப்பட்டன.

கோயிலைப் பராமரிக்கும் பொறுப்பு இந்தக் குடும்பத்தினரிடையே இருந்தது. அன்றிலிருந்து கோயிலம்மா என்று அழைக்கப்பட்ட அந்த அம்மாவின் உதவியால் எனது தாயாரும் படுத்த படுக்கையிலிருந்த எனது தந்தையாரும் அந்தக் குடிசையில் வசித்தார்கள். கோயிலம்மா கொடுத்து உதவிய கட்டிலில் அப்பாவைப் படுக்கவைத்தனர்.

கோயில் மண்டபம் பகலில் இருக்கவும், இரவில் ஆண்கள் படுக்கவும் இடமாயிற்று. மடப்பள்ளி அறைகள் பெண்கள் தங்கும் இடமானது. அமிர்தம் போல கோயிலின் கிணற்று நீர் நிழல்பரப்பும் விருட்சங்கள். அந்த இடர்களுக்கு மத்தியில் பெரும் பேறுகளாக எண்ணப்பட்டன.

மக்கள் அடர்ந்து வாழும் கிராமத்திலிருந்து வெகு தூரம் உள்ளே அமைந்துள்ள அந்தக் கோவிலில் இருந்து கிராமத்துக்குள் நுழைவது பெரும்பாடாக இருந்தது.

மணல் நிறைந்த பாதை நடந்தால் கால்கள் ஆழப்புதையும் சைக்கிளில் செல்வது ஒரு பெரிய சாதனைதான்.

ஆண்கள் ஆள்மாறி ஆள் காலையில் சந்தைக்குப் போனார்கள். எல்லாமே விலையேறிப்போன சூழல்.

கோயிலம்மா அடிக்கடி அம்மாவைக்காண வருவா. அய்யாவின் சுகம் விசாரித்துப் போவா. தங்களின் வயலில் விளைந்த நெல்லரிசி என்று சொல்லி அடிக்கடி ஒரு சிறிய தூக்குப் பையில் அரிசி கொண்டு வந்து கொடுப்பார். கோயில் வளவுக்குள் பிடுங்கியதாகத் தேங்காய்களும் தருவார். அம்மாவுக்கோ தர்ம சங்கடம்.

அந்த அம்மா நெடுகலும் அரிசியும் தேங்காயும் தாறா தம்பி. காசொண்டும் வாங்கேல்லை. எனக்கெண்டா ஒரு மாதிரியா இருக்கு. இனி ஏதும் தந்தால் காசு குடுப்பம். வேண்டாம் என்று சொன்னாலும் குறை விளங்கிப் போடுவா.

அம்மாவின் யோசனை சரியெனப்பட்டது. அப்படியே செய்யச் சொன்னோம். மறுநாள் காலை கோயிலம்மா கையில் நான்கு தேங்காய்களுடன் வந்தார். அம்மா தயங்கித் தயங்கி நெடுகலும் தேங்காய், அரிசி தரிகிறீர்கள் - அம்மா இந்தக் காசை வைச்சிருங்கோ வெளியில சரியான விலை விற்குது தேங்காய். நெடுகலும் என்னெண்டு உங்களிட்டை நான் சும்மா தேங்காய் வாங்கிறது?

நல்ல கதை பேசிறியள். நீங்கள் உங்கடை ஊரில், உங்கட மனையில வசதியாய் இருந்திருந்தால் காசு வேண்டலாம். இப்ப இஞ்ச அந்தரிச்சு வந்திருக்கிறியள். ஏதோ இந்த அளவிலையென்றாலும் உதவ முடியுதே என்று எனக்கு ஆறுதல் எங்களைப்போல மனிசர்தானே நீங்கள். இந்த நேரம் தேங்காய்க்குக் காசு வாங்கினால் என்ர மரங்கள் காய்க்காமல் விட்டுவிடும்.

இது கேட்டு அம்மாவுக்கு அழுவையே வந்துவிட்டது.

நாங்கள் எல்லோருமே நெகிழ்ந்து போனோம்.

படுக்கையில் கிடந்த அப்பாகூட பாதிவார்த்தையாலும், பாதி சைகையாலும் சொன்னார்.

பெரிய மனிசர் எப்பவும் இப்படித்தான்.

இடப்பெயர்ச்சி தந்த அனுபவங்களும், தரிசனங்களும் இதுபோல நிறைய.

எளிமையான வாழ்வும் கடின உழைப்பும் கொண்டு மனிதர்களாய் வாழ்ந்திருந்த அந்தக் கிராமத்து இதயங்களை அவற்றின் மனிதத்தை மறக்கவே இயலாது. ❋

பொ சன நூலகம்
யாழ்ப்பாணம்



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயாது அடியுறைந்து அற்று.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கிழக்கின் பதற்றம் தொடரும் அவலம்

கிழக்கில் அமைதியைக் குழப்பி, சமாதான சூழலை நச்சுப்படுத்தி சிதைக்க முனைப்புடன் செயற்பட்டுவரும் தேசவிரோத, தமிழின விரோத நாசகாரச்சக்திகளின் கொலை வெறித்தனமான வன்முறைகள் நாளுக்குநாள் மூர்க்கங்கொண்டு வருகின்றன.

கருணாவின் துரோகத்தனமான செயற்பாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமான இந்த நெருக்கடிநிலையினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தமது அரசியல் அபிலாஷைகளை எட்ட நினைத்த பேரினவாத மற்றும் மேலாதிக்க சக்திகள் மிகவும் சாதுரியமாகவே தமது அரசியல் சதுரங்கக்காய்களை நகர்த்தத்தொடங்கியுள்ளதன் எதிரொலியாகவே கிழக்குப்பதற்றம் நீடித்துவருகிறது.

கடந்த சிலமாதங்களாகத் தொடர்ந்துவரும் இந்தப் படுகொலைகள், கொலைமுயற்சிகள், வன்முறைகள் ஆகியவற்றின் பின்னணியில இராணுவப்புலனாய்வுப்பிரிவினரின் வலுவானதும், சமாதான செயற்பாடுகளுக்கு எதிரானதுமான சதி நடவடிக்கைகள் உள்ளதென்பது வெளிப்படையாகவே உண ரப்பட்டும், உணர்த்தப்பட்டுமுள்ள நிலையில் அது தொடர்பாக இறுக்கமானதும், கடுமையானதுமான எந்தவொரு செயற்பாட்டினையும் மேற்கொள்ளத்தயங்கும் அரசாங்கம் வெளிப்பகட்டுக்கு சமாதான நாடகம் ஒன்றினை அரங்கேற்ற முயன்று வருவதுடன், மற்றொரு புறத்தில் மீண்டும் ஒருயுத்த சூழ்நிலைக்கான தயார்ப்படுத்தலையும் மேற்கொண்டு வருகிறது.

நேற்று முன்தினம், மட்டக்களப்பில்- இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்ற இருவேறு சம்பவங்களில் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டும் மேலும் மூவர் காயப்படுத்தப்பட்டும் உள்ள நிகழ்வானது கிழக்கின் பதற்றநிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது. நடைபெற்ற அனைத்துக்கொலை மற்றும் வன்முறைச் சம்பவங்களும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ஆயுதங்களுடன், எந்தவிதமான பதற்றமும் இன்றி சர்வசுதந்திரமாக நடமாடும் குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தக் குழுவினர் தமது நடவடிக்கைகளை இராணுவக் காவல், சோதனைச்சாவடிகள் மற்றும் முகாம்கள் அமைந்திருக்கும் பகுதிகளுக்கு அண்மித்த பகுதிகளிலேயே மேற்கொண்டு வந்துள்ளதையும், அவர்கள் தமது தாக்குதல், கொலை முயற்சி நடவடிக்கைகளை நடத்திய பின்னர் வந்த வழியே வாகனங்களில் ஆயுதங்கள் சகிதம் தப்பிச்சென்றுள்ளதையும் கணித்துப்பார்த்தால் அவர்களுக்கு இராணுவம் - பொலிஸ் குறித்த அச்சம் எதுவும் இல்லை என்பதையும் உணரக்கூடியதாகவுள்ளது. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் அவர்கள் இராணுவத்தினரின் பாதுகாப்பு ஆசீர்வாதத்துடனும், நெறிப்படுத்தலுடனும்தான் இவற்றை மேற்கொள்கின்றனர் என்ற முடிவுக்கும் சுலபமாகவே வரக்கூடியதாகவும் உள்ளது.

வடக்கும் - கிழக்கும் முரண்பட்டால் வடக்கிலும் - கிழக்கிலும் பதற்ற நிலையை அதிகரிப்பதால் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற வாய்ப்பான சூழல் உருவாகும் என நம்பும் அரச சமாதான எதிர்ப்பு பேரினவாதிகளால் அதற்கான மூலோபாயங்களையும் சதிவியூகங்களையும் வகுத்து நடைமுறைப்படுத்த முயல்வது, இன்று நேற்று நடக்கும் சம்பவமல்ல. பௌத்த சிங்கள பேரினவாத அரசுகளை அடித்தளமாகக் கொண்டவைதான்.

கருணாவுக்கும் தமக்கும் எந்தவிதமான தொடர்புகளும் கிடையாது என்ற அரசின் மறுப்புக்கள் யாவும் பொய்யானவை என்பதை அதன் அமைச்சர்களுள் வெளியிட்ட ஒப்புதல் வாக்குமூலமே உறுதிசெய்துவிட்ட நிலையிலும் கருணாவுக்கு உதவியதாகவும் அதனை அரசுக்கு அறிவிக்காமல் இருந்ததாகவும் குற்றஞ்சாட்டி இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுவிட்ட நிலையிலும் அரசின் மீதான நம்பகத்தன்மை என்பது முற்றிலும் அற்றுவிட்டது என்ற தமிழ் மக்களின் நிலைப்பாடு நியாயமானதே.

எனவே கிழக்கின் பதற்றநிலை அதிகரிப்புக்கு அரசதரப்பினரின் பொறுப்பற்ற செயற்பாடுகள்தான் காரணம் என்ற கருத்து இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

கிழக்கில் நடைபெறும் வன்முறைகளுக்கு வருத்தம் தெரிவிப்பதன் மூலமோ, அங்கு பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிக்கை விடுவதன் மூலமோ, அது குறித்து விசாரணை செய்ய விசாரணைக்குழு அமைக்க முயற்சிப்பதன் மூலமோ அரசு தனது குற்றங்களை மறைக்க முயன்றாலும் அங்கு தற்போது ஏற்பட்டுள்ள அனைத்து நெருக்கடிகளுக்கும் அரசே பொறுப்பேற்கவேண்டும்.

அதுமட்டுமல்ல இந்த நெருக்கடி தொடருமானால் கிழக்கின் வன்முறைகளே சமாதானத்திற்கான சாத்தியங்கள் அனைத்தையும் சிதைக்கும் காரணியாகலாம். அப்படி நடக்க நேரின் மீண்டும் ஒரு யுத்தத்தை வேண்டுமென்றே ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கிய குற்றத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளவேண்டிய அவலம் நேரிடும் என்பதும் உறுதியே ஆகும்.

## நாடும் நடப்பும்




செய்தி :- இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஜனாதிபதியின் அறிக்கையால் சர்வதேச சமூகம் கவலை....

# பிரபாகரனும் பொட்டு அம்மானும் சரணடைந்தால் புலிகளுடனான தொடர்பை இந்தியா பலப்படுத்தும்

## நிருபம் சென் தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், புலிகளின் உளவுப் பிரிவுத்தலைவர் பொட்டு அம்மானும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் சரணடைவார்களாயின், இரு தரப்பினருக்கும் இடையில் தொடர்புகளைப் பலப்படுத்த இந்திய அரசு தயாராக இருப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் தெரிவித்தார்.

ஏஷியன் ட்ரிபியூன் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியின்போதே அவர் இவ்வாறு தெரித்தார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவித்ததாவது -

ராஜீவ்காந்தியின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக, இந்தியாவுக்குத் தேவைப்படும் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனையும், புலிகளின் உளவுப் பிரிவின் தலைவர் பொட்டு அம்மானையும் இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு, இந்தியாவின் புதிய அரசு - இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் இருவரையும் இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு கோரும் இந்திய அரசின் கடிதமொன்று, இலங்கைக்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தியின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளான - பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகிய இருவர் தொடர்பாகவும், இந்தியாவின் நிலைப்பாட்டை நோர்வேயின் சமாதானத் தூதுவர் அறிவார்.

புலிகள் அமைப்புமீது முன்னர் விதிக்கப்பட்ட தடை, இந்தியாவால் மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. எனினும், இந்தத் தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இந்தியாவிலும், இலங்கையிலிருந்தும் செயற்படும் ஆதரவாளர்களால் இந்திய அரசிடம் கோரிக்கைகள் விடப்பட்டிருந்தது.

புலிகள் இயக்கத்துக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறும், அந்த அமைப்பைத் தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளுமாறும், புலிகளின் ஆதரவாளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்குக் கடிதமூலம் விடப்பட்டிருந்த கோரிக்கையும் உடனடியாக மறுக்கப்பட்டுவிட்டது எனவும் கூறிய அவர்,

இந்தியாவுக்கும், புலிகளுக்கும் இடையிலான இருபக்கத் தொடர்புகளும் பலப்படுத்தப்படவேண்டும் என கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆலோசனை வழங்கினார்.

இந்தியாவில் புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளபோதும், நெருக்கடி நிலையிலுள்ள இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் - இந்தியா காண்பிக்கும் அடிப்படைக் கொள்கையில் மாற்றம் எதுவும் ஏற்படாது.

இந்தப் பிரச்சினைக்குக் கிடைக்கும் தீர்வு, அனைத்து மக்கள் பிரிவினராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். முஸ்லிம் போன்ற சிறிய மதப்பிரிவினரின் பாதுகாப்பும் கவனிக்கப்படவேண்டும்.

இடைக்கால நிர்வாக சபை என்பது இறுதித் தீர்வுடன் தொடர்புடையது. எந்தத் தீர்வும் ஜனநாயகம் மற்றும் பெரும்பான்மைப் பொதுக் கருத்துக்களின்மீதே கட்டியெழுப்பப்படவேண்டும். புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா - புதிய. கட்சியொன்றை அமைக்க முயற்சிப்பது மகிழ்ச்சிக்குரியது.

இதேவேளை - இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையும் விரைவில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் இந்தியா - இலங்கைக்கு யுத்த தளபாடங்களை வழங்குதல், உளவுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் உட்பட, பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்கள் அடங்கும் எனவும் அவர் மேலும் கூறினார். (தே)

# சாராயம் விற்றோருக்கு நீதிமன்றம் அபராதம்!

அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்ற 10 பேருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா இந்தத் தண்டனையை நேற்று முன்தினம் விதித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் அரச சாராயத்தினை அனுமதிப்பத்திரம் இன்றி விற்பனைசெய்த 10 பேருக்கு, தலா மூவாயிரம் ரூபா தண்டப்பணமும், 2000 ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதில் தர்மப்பணத்தினைக் கோண்டாவில் சிவபூமி உள நலன் குன்றியோர் பாடசாலைக்கும், யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையத்துக்கும், விழிப்புலனற்றோர் சங்கத்துக்கும் செலுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் உதவினால் போக்குவரத்து சேவையை சீராக்கலாம்

## வடபிராந்திய போக்குவரத்துசேவை பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொருவரும், தமக்கு வழங்கப்படும் நிதியிலிருந்து ஒவ்வொரு பஸ் இயந்திரங்களைப் பெற்றுத்தந்தால் யாழ். மாவட்டத்தில் நிலவும் பஸ்சேவைக் குறைபாடுகளை ஓரளவுக்கு நிவர்த்திசெய்ய முடியும் என வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவும் போக்குவரத்து சீரின்மை குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ் மாவட்டத்திலுள்ள மூன்று டிப்போக்களிலும், எல்லாமாக 88 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை போதுமான தொகை அல்ல, எமக்கு 120 பஸ்களாவது தேவை. அப்போதுதான் அரச போக்குவரத்துச் சேவையைச் சீராக நடத்த முடியும்.

தற்போது எமது கராச்சில் திருத்த வேலைகளுக்காக 20 இற்கும் மேற்பட்ட பஸ்கள் நல்ல வெளித்தோற்றங்களைக் கொண்டுள்ளபோதிலும் இயந்திரங்கள் பழுதான நிலையில் உள்ளன. அவற்றில் இரண்டை எமது சொந்த நிதிமூலம் கடந்த வாரம் திருத்தி, புதிய இயந்திரங்கள் பொருத்தி, பாவனைக்கு விட்டுள்ளோம்.

இவ்வாறு மேலும் 9 பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றோம்.

யாழ்.மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட 9 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு பஸ் இயந்திரம்மூலம் 9 பஸ் இயந்திரங்களைப் பெற்றுத்தந்தால், யாழ்.மாவட்டத்தில் பொது மக்களுக்கான பஸ் சேவை மற்றும் பாடசாலை சேவை முதலானவற்றை சிறப்பாக நடத்தமுடியும்.

அரசின் பணிப்பின் பெயரில் எம்மால் இராணுவத்தினரின் பாவனைக்காக வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 13 பஸ்களில் 5 பழுதடைந்துள்ளன. இவ்வாறு பழுதடையும் வாகனங்களைத் திருத்தும் பணிகளை மேற்கொள்வதற்கும் போதியளவிலான வசதிகள் இல்லை. எனினும், நாம் எம்மிடமுள்ள பொறியியலாளர்களைக் கொண்டு சிறப்பான சேவைகளை வழங்கி வருகின்றோம்.

எம்மிடமுள்ள பழுதடைந்த 24 பஸ்களை திருத்தித் தருவதற்கு இலங்கைப் போக்குவரத்து அமைச்சு உடன்பட்டிருக்கின்ற போதிலும், அது எந்தளவுக்குச் சாத்தியமானது என்பது கேள்விக்குரிய விடயமே எனத் தெரிவித்தார். (ப)

கல்வியியல் -பா. தனபாலன்

# மாணவர் ஆளுமைகளை விருத்தியாக்கும் கல்விச் செயற்திட்டப் பிரயோகங்கள்



மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் உரிய தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பல்வேறு கற்றல் - கற்பித்தல் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தமது எதிர்கால வாழ்வின் சவால்களை வெற்றி உண்டு. ஒரு தொழிலை சுயவிருப்புடன் செய்து முன்னேறும் தேர்ச்சியுடைய நற்பிரஜைகளை, ஆளுமையுடைய மனிதர்களை உருவாக்கும் நோக்குடன் இடைநிலை, உயர் கல்வி மாணவர்களுக்குக் கல்வியியற் செயற்திட்டங்கள் (Education projects) அறிமுகப்படுத்தப் படுகின்றன. இவை பாடசாலைகளின் உயிர்த்துடிப்பான கற்றல் - கற்பித்தல் செயன் முறைகளை விருத்தியாக்கும் நிலையான அபிவிருத்தியின் முன்மாதிரிகளாகின்றன.

பாடசாலைக் கலைத்திட்டம் மூலமாக, சேகரிப்பு ஊக்கம், சுயகற்கை, செயன் முறைக்கற்கை, களககற்கை, ஆய்வு முறை ஈடுபாடு, புதிய கண்டு பிடிப்புக்கள், சுயதிறனாற்றல், முகாமைத்துவ அபிருத்தி, தலைமைத்துவம் என்பவற்றை முறையாக ஏற்படுத்தும் நோக்கிலேயே கல்விச் செயற்திட்டக் கற்கைகள் பல்வேறு பாடங்களினூடாக அறிமுகம் செய்யபபடுகின்றது. ஆனாலும், நடைமுறையில் எமது பாடசாலைகளில், உயர் கல்வி நிறுவனங்களில் புள்ளிகளைப் பெற்றால் போதும் என்ற நோக்கில் ஒரு தலைப்பைத் தேடிப் பிடித்து யாரைக் கொண்டாவது எழுதிச் சமர்ப்பித்தல் என்ற நிலை காணப்படுகின்றது. இந்த நிலைக்குச் செயற்திடடங்கள் பற்றிய அறிவீனங்களே காரணங்களாகவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் செயற்திட்டம் பற்றி மிகக் குறைந்த அறிவுடன் காணப்படுகின்றனர். மேலும் மாணவர் கல்விச் செயற்திட்டங்களை தமது ஆக்கத்திறன், ஆர்வம், ஈடுபாடு ஆகியன கொண்டு அனுபவித்துச் செய்வதற்கு மாறாக, அதனை ஆசிரியர்களால் சுமத்தப்படும் சுமையாகக் கருதி அதிலிருந்து விடுபடுவதற்கான ஒரு செயற்பாட்டைச் செய்து அறிக்கை சமர்ப்பிக்கின்ற நிலை, மற்றும் ஏனையவற்றின் மாற்றீடுகளாக, ஏனையவற்றைப் பார்த்து எழுதிய வையாக, மொழி பெயர்க்கப்பட்டவையாக, அல்லது தழுவல்களாகவே செயறதிட்டங்கள் பெரும்பாலும் சமர்ப்பிக்கப்படுகின்றன. இவை மாணவ்களின் ஆளுமைகளைச் சிதைக கின்றன.

## கல்விச் செயற்திட்டங்களை இனம் காணல்

ஒரு கல்விச் செயற்திட்டம் என்பது பிரச்சினை ஒன்றின் தீர்வுக்கு அல்லது கல்வி மேம்பாட்டுக்கு அடிப் படையாக அமையும் எளிதான முறைமையாகும். இங்கு பிரச்சினை என்ற சொல், யாதேனும் கல்விக் குறிக்கோளை அடைந்து கொள்ள இடையூறாக ஒரு தடை ஏற்படுமிடத்து அத்தகைய தடை பிரச்சினை எனப்படுகிறது. இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்து தீர்வுகளைக் காணவே பெரும்பாலும் செயற திட்டங்கள் வழிகாட்டுகின்றன.

கல்விச செயற்திட்டங்களை இனம் காணவும். திட்டமிடவும் வெற்றிகரமாக அமுலாக்கவும் வேண்டிய திறன்களை மாணவர்கள் பெற ஆசிரியர்கள் சரியான வழிகளைக் காட்ட வேண்டியுள்ளது. இன்று கல்விச் செயற்திட்டங்களின் வளர்ச்சி, செயல் நிலை ஆய்வுகளாக விரிவாகியுள்ளது. செயற்திட்டங்களை இனம் காண-

1. குறித்த பாட விடயங்களைப் புரிந்து கொண்டு செயற்திட்ட சூழலைப் புரிந்து கொள்ளுதல்.

2. செயற்திட்ட தேவை, சூழல் நிலைமைகள், பிரச்சினைகளை இனம் காணல், அடையாளப்படுத்தல்.

3. பல்வேறு வழிகளில் தரவுகளைச் சேகரித்து பகுத்தாராய்ந்து தீர்வுகளைக் கண்டு நடைமுறைப் படுத்தல், திட்டம் தயாரித்தல்.

4. மாற்றங்கள், அபிவிருத்திகளை எதிர்நோக்கி அறிக்கையாக்கல்.

ஒரு செயற்திட்டமானது குறிக்கோள்கள் (Objectives), உள்ளீடுகள் (Inputs), செயற்பாடுகள் (Activities), வெளியீடுகள் (Out puts) என் பனவற்றின் தொகுதியாகவுள்ளது. புதிய கண்டுபிடிப்புக்கு அல்லது பிரச்சினைத் தீர்வுக்கு, பல செயற்பாடுகளை இனம்கண்டு வினைத்திறன் பொருந்திய வெளியீட்டை நோக்கி ஆற்றப்படும் செயலாற்றுகைகள் அனைத்தும் செயற்திட்டத்தினுள் அடங்குகின்றது. ஒரு செயற்திட்டத்தை இனம்காணும் போது- பின்வரும் வினாக்களுக்கு விடை தெரிந்திருக்க வேண்டும்.

♦ இந்தச் செயற்திட்டம் எந்தப் பாடத்தின் எந்த உள்ளடக்கத்தைப் பற்றி நிற்கின்றது? ஏன் இதன் தேவை அவசியம், எங்கு? எந்த? முறையில் இதை மேற்கொள்வது?

♦ அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள் யாவை? யார் யாரிடம் சென்று தகவல் பெறல்? உதவி பெறல்? தேவைப்படும் வளங்கள் எவை? எவ்வளவு காலம் தேவை?

♦ எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் எவை? எவ்வாறு. முன்னேற்றத்தை மதிப்பிடலாம்?

ஆகிய வினாக்களினுடாக செயற்திட்ட வடிவமைப்பை (Project Design) ஏற்படுத்திக் கொள்ளலாம்.



## மாணவர் அடைவுகள்

சரியான வழிகாட்டலினூடாக கல்விச் செயற்திட்டம் ஒன்றை சுயமாக ஒரு மாணவன் செய்து முடிக்கின்ற போது அவனிடம் பின்வரும் அடைவுகள் வெளிப்படும்.

அ. கல்வி - பாடம் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டு பிடித்து அடையாளம் கண்டு தீர்வுகாணும் தேர்ச்சி ஏற்படல்.

ஆ. நேர - கால வரையறை, விஞ்ஞான ரீதியான செயற்பாட்டு முகாமைத்துவத் திறன்கள், ஆளிடைத் தொடர்புகள் விருத்தியாதல்.

இ. புதிய கண்டுபிடிப்பு - தேடல் ஊக்கம், தானாக செயலாற்றி முடிவெடுக்கும் ஆளுமை. கற்கக்கற்றல் - சுயகற்றல் தேர்ச்சிகள் ஏற்படல்.

ஈ. குழுவுணர்வு - பரஸ்பர நன்மை, ஒத்துழைப்பு, அபிவிருத்தி மனித விழுமியப்பண்புகளை வளர்த்தல். பாடசாலைப்பற்று, சமூகப்பற்று ஏற்படல்.

உ. மொழிவிருத்தி -அறிக்கை சமர்ப் பிக்கும் ஆற்றல், படைப்பாற்றல், ஆக்கத்திறன், தீர்க்க தரிசனம், ஏனையவர்களுக்கு வழிகாட டும் திறன்கள் ஏற்படல்.

இவ்வாறான அடைவுகளை மாணவர்கள் பெறுதலே இன்றைய செயற்பாட்டு அடிப்படையிலான கல்வியாகவுள்ளது. இது மாணவர்கள் எதிர்கால உலகின் சவால்களைச் சமாளித்து உயர்வுபெறும் திறன்களை வளர்க்கும். இந்த வகையில் செயற்திட்ட முறைக் கற்றல் மிகுந்த பயனுடையதாகவுள்ளது. மாணவர்கள் பாடசாலைகளிலும், வெளியிலும் தமது பாட நோக்கங்களுக்கு அமைய செயற் திட்டங்களை மேற்கொள்ளலாம். இதனால் சமூகமும், பாடசாலையும் பயன்பெறும்.

## செயற்திட்ட முகாமைத்துவம்

தெரிவு செய்யப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் செயன் முறை முகாமைத்துவமாகும். ஆசிரியர், மாணவர்களுக்கு வழிகாட்டித் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், அறிக்கை தயாரித்தல் என்ற வகையில் செயற்திட்டததை நடை முறைப்படுத்த முகாமை செய்ய வேண்டும். இதில் கண்காணிப்பு (Monitoing) என்ற செயனமுறை முக்கியமாகிறது. இதன் கீழ் அனைத்துச் செயற்திட்டப் படி முறைகள் தோறும் குறிக்கோள்கள் விதந் துரைக்கப்பட்ட வகையில் நிகழ்கின்றனவா? என அறிய முடியும். இதனூடாகப் பிழைகளை நிவர்த்தி செய்யலாம். செயற்திட்ட காலமுறைமையை ஒழுங்குபடுத்த காணட் படம் (Ghant Chart) உதவுகிறது. செயற்திட்ட முகாமைத்துவத்தில் மிக முக்கியமானது. செயற்திட்ட அறிக்கையாகும் இது செயற்திட்டத்தின் முழுச செயற்பாடுகளையும் விபரிக்கவல்லது. ஒரு செயற்திட்ட அறிக்கையின் கட்டமைப்பு பின்வருமாறு-



1. அறிமுகமும் செயற்திட்ட தேவை - பின்னணியும்

2. செயற்திட்ட நோக்கமும், எதிர்பார்ப்புக்களும் - பிரச்சினைகளும்

3. செயற்திட்ட முக்கியத்துவமும் - தரவு சேகரித்தலும், முறையியல்களும்

4. தரவுகளை நிரற்படுத்தல் - பகுப்பாய்வு செய்தல் - பெறுபேறுகள், கண்டுபிடிப்புகள், தீர்வுகளை முன்வைத்தல்

5. செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தல்-வெற்றிகள், பெறுபேறுகள்.

6. முடிவுகளும் விதந்துரைகளும்- அபிவிருத்தி முன்மொழிகளும்.

7. உசாவிய துணைவளங்கள்- படங்கள், ஆதாரங்கள், அட்டவணைகள்.

இவற்றுடன் செயற்திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது அதன் எழுத்துரு, அளவுகள், வரி இடை வெளி, அமைப்பு, தலைப்புக்கள், உபதலைப்புக்கள், அங்கீகாரங்கள், பக்க அமைப்புக்கள் என்பவை ஒழுங் கமைக்கப்பட வேண்டும்.

இவற்றை பாடசாலை மாணவர்கள் சரியாக விளங்கி தமது கல்விச் செயற்திட்டங்களை ஈடுபாட்டுடன் நிறைவேறும் போது, அவர்களுடைய ஆளுமைகள் விருத்தியாகும். எதிர்காலத்தில் நாட்டுப்பற்றுள்ள சமூக அபிவிருத்தி நோக்கிய சிந்தனையுள்ள கண்டுபிடிப்பாளர்களாக அவர்கள் உருவாவர். ♦







முல்லைத்தீவில் நடந்த கரும்புலிகள் தின நிகழ்வுகளில் இருந்து.....







வவுனியாவில் நடந்த கரும்புலிகள் தின நிகழ்வுகளில் இருந்து.....

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சதாமுக்கு மரணதண்டனை

## பிரதமர் அலாவி தெரிவிப்பு

(பாக்தாத்)

பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக்கூறி ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்து சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்து அகற்றியது.

பல மாதங்களாக நடத்திய தேடுதல் வேட்டைக்குப் பிறகு ரகசிய இடத்தில் பதுங்கி இருந்த சதாமை அமெரிக்கப்படை கைதுசெய்தது. ஈராக்கின் நிர்வாகத்தை தற்காலிகமாகக் கவனித்துவந்த அமெரிக்கப்படை கடந்தசில நாட்களுக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பை ஈராக் மக்களிடம் ஒப்படைத்தது.

இடைக்காலப் பிரதமராக அயாத் அலாவி நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆட்சிப் பொறுப்பை இடைக்கால அரசிடம் ஒப்படைத்த அமெரிக்கா சதாம் ஹுசைனை ஈராக் அரசிடம் ஒப்படைத்தது.

சதாம் ஹுசைன் மீதான வழக்குகளை விசாரிக்க ஈராக் அரசு தனி நீதிமன்றம் அமைத்துள்ளது. இந்த நீதிமன்றத்தில் சதாம் ஹுசைனும் அவரது கூட்டாளிகளும் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் மீதான குற்றசசாட்டுக்களும் அப்போது படித்துக்காட்டப்பட்டது.

சதாம் ஹுசைன் குவைத் மீது படையெடுத்து ஈரான்மீது தாக்குதல் நடத்தியது. விஷசவாயு செலுத்தி ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்தது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இந்த நிலையில் இடைக்கால பிரதமர் அயாத் அலாவி தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது-

சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை நீண்ட நாட்களுக்கு நடக்காது விரைவில் முடிந்துவிடும். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை கிடைக்கும். அவருக்கு என்ன தண்டனை என்பதை தனி நீதிமன்றம்தான் முடிவுசெய்யவேண்டும். பொதுமக்களின் கருத்துக்களும் கேட்கப்படும். இவ்வாறு அலாவி கூறினார்.

இந்த நிலையில் ஈராக்கின் தெற்குப் பகுதியில் சதாம் ஆதரவுப் படையினர் அரச அலுவலகங்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள்.

சரமாரியாக எறிகணைகளையும் வீசினார்கள். இந்தத் தாக்குதலில் அலுவலகங்கள் அருகே உள்ள வடு



களும் சேதம் அடைந்தன. பொது மக்கள் 8 பேர் இதில் பலியாகினர்.

# விண்வெளி ஆய்வுகூடத்தின் பழுது திருத்தப்பட்டது



அமெரிக்கா, ரஷ்யா உட்பட 16 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச ஆய்வு கூடத்தை அமைத்துள்ளன. இந்த ஆய்வு கூடத்துக்கு அவ்வப்போது விண்வெளி வீரர்கள் ரொக்கட்டில் சென்று அங்கு தங்கியிருந்து ஆயவு நடத்திவருகிறார்கள். இந்த நிலையில் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தின் 4 கிரியோஸ்கோப் கருவிகளில் ஒரு கருவி திடீரென பழுதடைந்தது.

இந்தப் பழுதை சரி செய்வதற்காக விண்வெளி ஆய்வுகூடத்தில் தங்கியிருந்த வீரர்கள் ஜென்னடி படால்கா, மைக்பிங்கி ஆகியோர் ஆய்வு கூடத்திலிருந்து வெளியேவந்து விண்வெளியில் நடந்தனர். சார்யா கலத்தில் மிதந்தபடி அவர்கள் பழுதை திருத்தி முடித்தனர்.

## உலக நோக்கு

# ஸ்பெயின் ரயில் குண்டுத்தாக்குதல் விசாரணை ஆரம்பமாகவுள்ளது



(ஸ்பெயின்)

ஸ்பெயினில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பை தவிர்த்திருக்கலாமா என்பதுபற்றி ஸ்பெயின் நாடாளுமன்றக் குழு விசாரணை நடத்தவுள்ளது.

இதற்குப் பரீட்சார்த்தமாக கடந்த [illegible]ச் 11 ஆம் திகதிக்குப் பின்னர் ஸ்பெயினின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வாறான அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதனை இந்தக் குழு அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களிடம் விசாரணை நடத்தவுள்ளது.

இந்த விசாரணையை நடத்தவுள்ள குழு அரசாங்கத்துடனும், படையினருடனும் இணைந்தே செயற்படவுள்ளது. அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் ஸ்பெயினில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளதாக ஸ்பெயின் மக்களில் பலர் முறையிட்டுள்ளனர்.

ஸ்பெயின் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியற் கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்தே இந்தக் குழு இரண்டு மாதத்திற்குள் தனது விசாரணைகளை நடத்தி முடிக்கவுள்ளது.

ஆரம்பகட்ட விசாரணைகளில் கொன்சவேற்றிவ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமரோ, அவரது பதவியில் தற்போது இருப்பவரோ அழைக்கப்படமாட்டார். ஆனால், ஸ்பெயின் மக்களில் பலர் இந்தத் தாக்குதல் குறித்து அவர்கள் பதில்தர வேண்டுமென விரும்புகின்றனர்.

இதேவேளை அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்கள் மீதான தாக்குதலின் பின்னர் இடம்பெற்ற ஒன்றரை வருட விசாரணையில் அமெரிக்க அதிபர் புஷ் உட்பட ஆயிரம் பேர்வரை விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

ஆனால் ஸ்பெயினில் நடத்தப்படவுள்ள விசாரணை இரண்டு மாதத திற்குள் முடிவடைய இருப்பதும், முன்னாள், இந்நாள் பிரதமர்கள் விசாரணைக்கு அழைக்கப்படாமல் இருப்பதும் ஒரு கண்துடைப்பு நாடகமென்றே கூறப்படுகின்றது.

# பல்கலை விரிவுரையாளர் உட்பட ஐவர் இஸ்ரேலியப் படையால் சுட்டுக்கொலை

பலஸ்தீனத்தின் நகரான நப்லஸில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் ஒரு இஸ்ரேல் படைவீரர் மற்றும் நான்கு பலஸ்தீனர்கள் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

நப்லஸிலுள்ள அகதிமுகாமில் இருந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளைக் சரணடையுமாறு இஸ்ரேல் படையினர் கோரியவேளை இடம்பெற்ற தாக்குதல்களின்போதே இநத உயிரிழப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்த அகதி முகாமின் கட்டடத்திற்குள் மறைந்திருந்த இஸ்லாமியப் போராளிகளைக் கைதுசெய்யும் நோக்குடன் இஸ்ரேலியப் படையினர் கட்டடப் பகுதிக்கு அண்மையாகச் சென்றவேளை இடம்பெற்ற தாக்குதலில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டார். அவருடன் கூடஇருந்த மற்றைய ஆயுததாரி அருகிலிருந்த கட்டடத்திற்குள் தப்பிச்செல்ல முற்பட்டவேளை கொல்லப்பட்டாரென இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

இஸ்ரேலிய இராணுவத்தால் ஏவப்பட்ட எறிகணையொன்று குறித்த கட்டடத்திற்குள் விழுந்து வெடித்ததில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், அவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளரான காலீத் சாலா மற்றும் அவரது 16 வயது மகனான மொகமட் எனவும், பலஸ்தீனத் தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட விரிவுரையாளரான சாலா அமெரிக்க பிரஜாவுரிமை பெற்றவரென எ.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மற்றைய ஒரு சம்பவத்தில் இஸ்



ரேலியப் படையினர் நடத்திய தாக்குதல்களில் பலஸ்தீன விடுதலை முன்னணியின் இரண்டு சிரேஷ்ட உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

காஸாவிலுள்ள ரபா அகதி முகாம் பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 வயதான பலஸ்தீன சிறுவன் ஒருவனும் கொலலப்பட்டான்.

# சூடானின் டர்பூர் பிரதேசத்திலுள்ள கண்காணிப்பாளர்களின் பாதுகாப்புக்கு படைகளை அனுப்ப ஆபிரிக்க யூனியன் முடிவு

சூடானின் மேற்குப் பகுதியான டர்பூரில் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களை பாதுகாப்பதற்குப் படைகளை அனுப்ப ஆபிரிக்க யூனியன் உடன்பட்டுள்ளது.

டர்பூரில் சூடானிய அரச படைகள் மற்றும் கிளர்ச்சியாளர்களால் பரவலாக நடத்தப்படும் யுதத நிறுத்த வன்செயல்கள் குறித்து ஆராய்வதற்கு 100 கண்காணிப்பாளர்களை அனுப்ப ஆபிரிக்க யூனியன் திட்டமிட்டுள்ளது.

தற்போது 40 கண்காணிப்பாளர்களே டர்பூர்ப் பிரதேசத்திற்கு சென்றுள்ளனர். ஆனாலும் அங்கு காணப்படும் பாதுகாப்புக் குறைபாடுகளினால் இவர்கள் தமது பணியை ஆரம்பிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

எனவே அந்தக் கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு ஆபிரிக்க யூனியன் 300 படையினரை அனுப்ப தற்போது உடன்பட்டுள்ளது.

டர்பூர் பிரதேசத்திற்கு படைகளை அனுப்புவது தொடர்பாக நைஜீரியா, மற்றும் றுவாண்டா ஆகிய நாடுகள் உடன்பட்டுள்ள தாகவும், தற்போது தன்சானியா மற்றும் பொற்ஸ்வானா ஆகிய இரண்டு நாடுகளுடனும் படைகளை அனுப்புவதற்கு அவர்க



ளது பங்களிப்புத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுவருவதாகவும் ஆபிரிக்க யூனியனின் சமாதானம் மற்றும் பாதுகாப்புப் பணிப்பாளர் சாம் ஐபோக் தெரிவித்தார்.

டர்பூர் பிரதேசத்திற்கு ஆபிரிக்க யூனியன் படைகளை அனுப்புவது தொடர்பில் சூடான் அரசு ஏற்றுக்கொள்ளுமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆனாலும், இதுதொடர்பாக சூடான் அரசிடமிருந்து எவ்வித பதிலும் வெளிவரவில்லை.

# இஸ்ரேல் நெகேவ் பாலைவனத்திலுள்ள அணுத்திட்டம் தொடர்பான படத்தை இஸ்ரேல் முதன் முதலில் காட்டியது

இஸ்ரேல் நெகேவ் பாலைவனத்திலுள்ள அணுசக்தி நிலையத்திலிருந்த தனது அணுத்திட்டம் தொடர்பான படத்தை முதன்முதலாக காட்டியுள்ளது.

இந்தப்படம் இஸ்ரேலினால் புதிதாக நடத்தப்படும் இணையத்தளமொன்றில் காட்டப்பட்டுள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் அணு ஆயுதங்களை இல்லாதொழிப்பது தொடர்பாக ஐ.நாவின் கண்காணிப்பாளர்கள் இஸ்ரேல் வந்து பேச்சு நடத்துவதற்கு முதல்நாள் இஸ்ரேலினால் இந்தப் படம் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் தன்னிடம் அணு ஆயுதங்கள் இருப்பதனை மறுத்தே வந்துள்ளது. ஆனால், சுமார் 200 வரையான அணு ஆயுதத் தலைகளை இஸ்ரேல் டிமோனா என்ற நகரத்திலுள்ள தனது அணு ஆயுத நிலையத்தில் வைத்திருப்பதாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

காட்டப்பட்ட படமானது சிறியளவில் தெளிவற்றதாக உள்ளதுடன் கட்டடத்தின் தொலைவில் வைத்து படம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் படம் இஸ்ரேலின் அணு ஆயுதம் குறித்த முரண்பாடான விடயம் குறித்து சிறிதளவே கூறுகின்றது.

இதேவேளை இஸ்ரேல் தன்னிடமுள்ள அணு ஆயுதத் திட்டங்களை சர்வதேச பரிசோதனைக்கு உட்படுத்த அனுமதிக்க வேண்டுமென அழுத்தத்திற்குள்ளாகியுள்ளது.

கடந்த டிசம்பர் சர்வதேச அணு சக்தி அமைப்பின் தலைவர் மொகமட் எல்பராடி இஸ்ரேல் தனது அணு ஆயுதங்களைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென கேட்டிருந்தார்.

அண்மையில் ஈரான், வடகொரியா நாடுகள் தம்மிடமிருந்த அணு ஆயுதங்களை சர்வதேச அணு சக்தி அமைப்பிற்கு காட்ட முன்வந்துள்ள நிலையில் இஸ்ரேல் அணு ஆயுத ஒழிப்புத் தொடர்பான ஒப்பந்தத்தில்



கையெழுத்திட மறுத்துவருகின்றது.

இஸ்ரேல் இவ்வாறான நிலையில் உள்ளதனால் சர்வதேச அணு சக்தி அமைப்பு இஸ்ரேலை அச்சுறுத்தவோ அல்லது பரிசோதனை நடத்தவோ முடியாமலிருக்கின்றது.

அணு ஆயுதங்கள் தொடர்பாக மத்திய கிழக்கில் அறிமுகம் செய்யப்படுவது இதுதான் முதற்தடவை அல்ல என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



அக்னி ஏவுகணை - 1

700 கிலோ மீற்றர் தூரம் அணுகுண்டை எடுத்துச் சென்று தாக்கக் கூடிய அக்னி - 1 ஏவுகணை பரிசோதனை நேற்றுமுன்தினம் இந்தியாவால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சாகும்வரை உண்ணாவிரதத்தில் மருத்துவபீட மாணவி குதித்தார்!



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட நிர்வாகத்தின் பழிவாங்கும் போக்கினாலும், யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டாலும் பாதிக்கப்பட்ட மருத்துவபீட மாணவி ஒருவர் ஐந்தம்சக் கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுதல் சாகும்வரையான உணணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளார்.

கிருஷ்ணன் புஸ்பமாலா என்ற இந்த மாணவி 2001 ஆம் ஆண்டில் இருந்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட நிர்வாகத்தால் தொடர்ச்சியாக பழிவாங்கப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்கிருந்தார்.

குறிப்பிட்ட மாணவி மருத்துவபீட இரண்டாம் ஆண்டுப் பரீட்சைக்கு ஐந்து முறை தோற்றியதாகத் தெரிவித்து அவற்றில் தேர்ச்சி பெறாமையால் அவர் சட்டப்படி பல்கலைக்கழக மாணவி என்ற அந்தஸ்தை இழந்துள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்ததுடன் அந்த மாணவியை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து 2001ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டு வரை இடைநிறுத்தி வைத்தது.

இது தொடர்பாக இக்காலப் பகுதியில் மருத்துவபீட நிர்வாகத்திடம் தொடர்ச்சியாக தனது நியாயப்பாட்டினைத் தெரிவித்து காரணங்களைக் கேட்டபோதும் எவ்வித பதிலும் கிடைக்காத காரணத்தால் இதனை எதிர்தது குறிப்பிட்ட மாணவி யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தார். இவரது முறைப்பாட்டை விசாரணை செய்த மனிதஉரிமைகள் ஆணைக்குழு, குறிப்பிட்ட மாணவி மருத்துவபீடத்தில் கல்வி கற்பதற்கு உரிய அனைத்துத் தகுதிகளையும் கொண்டிருப்பதாகவும் அவர் இன்னுமொரு பரீட்சை எடுப்பதற்கு தகுதியுடையவர் எனவும் தெரிவித்தது.

இதனை அடுத்து - மனித உரிமை ஆணைக் குழுவின் சிபார்சுக்கிணங்க குறிப்பிட்ட மாணவிக்கு மேலதிகமாக ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி அனுமதிப்பதாக மருத்துவபீட நிர்வாகம் கடிதம் மூலம் அறிவித்தது.

ஆனால், இதனை ஆட்சேபித்த இம்மாணவி - தனக்கு வழங்கப்படவேண்டிய சந்தர்ப்பத்தையே வழங்க வேண்டும் எனவும், தனது அமர்வுகள் அனைத்தும் நிறைவுற்றது போன்று மேலதிகமான ஒரு அமர்வினை வழங்குவதென்ற நிர்வாகத்தின் இக்கடிதத்தினை ஏற்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், குறிப்பிட்ட மருத்துவபீட மாணவி ஐந்து கோரிககைகளை முன்வைத்து சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார்.

இதேவேளை, இது தொடர்பாக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவரிடம் வினாவியபோது இவ்விடயதத்தில் தான் தலையிட முடியாது எனத் தெரிவித்தார்.

# யாழ். அபிவிருத்தி குறித்து ஆராய ஜப்பானிய குழுக்கள் வருகின்றன!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராயவென, ஜப்பான் நாட்டின் இரண்டு குழுக்கள் இன்று மாலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளன என, யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜப்பானியத் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் கோயா இவாசிற்றா தலைமையில் வருகை தரும் இந்த இரு குழுக்களும், யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய கடற்தொழில் சம்பந்தமான அபிவிருத்திப் பணிகள் மற்றும் கமநல சேவைகள் தொடர்பான அபிவிருத்திகள் பற்றி ஆராயவுள்ளன.

இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநிற்கும் இக்குழுக்கள், யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் விஜயம் செய்து கடற்தொழிலாளர்கள், விவசாயிகள் முதலானோரைச் சந்தித்து உரையாடவுள்ளதுடன், பிரதேச செயலகங்களிலும் விசேட கூட்டங்களை நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செயலகத்தில் நாளை காலை அரசாங்க அதிபரைச் சந்தித்து உரையாடிய பின்னரே, இக்குழுவினர் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் முதலான இடங்களுக்குச் செல்லும் இவர்கள், நாளை மறுதினம் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(ப)

# மாகாணசபை தேர்தல் பிரசாரம்; இன்றுடன் நிறைவடைகின்றது!

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது பிரசாரக் கூட்டங்களை இன்று நள்ளிரவுடன் நிறுத்துமாறு தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி மேல் மாகாணசபைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், வேட்பாளர்கள் இனறு நள்ளிரவு 12 மணியுடன் தமது பிரசார நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## சோதனை நடவடிக்கைகளை...

வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டும், மூவர் காயமுற்றதை அடுத்தே இந்த அவசர பாதுகாப்பு மாநாடு கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் விஷேட அதிரடிப்படை உட்பட முப்பது இராணுவ அதிகாரிகளும் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்திலேயே இராணுவக கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் வீடுகள் மற்றும் வீதிச்சோதனைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைவரம் மற்றும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள விசேடகுழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தின் ஆலோசனைக்கு அமைவாக இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சாந்த கொட்டேகொட இதற்கான உத்தரவை வழங்கியிருந்தார்.

## ஆயுதங்களுடன்...

செய்த இரண்டு சிங்களவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடி விட்டனர். கைதானவர்களிடமிருந்து ரி-56 ரகத் துப்பாக்கிகள் -3, ரி-84 ரகத் துப்பாக்கிகள் - 3, ரி-81 ரகத் துப்பாக்கி - 1, 9 மி.மீ. பிஸ்டல் - 1, கைக்குண்டுகள் - 5, சயனைட் குப்பிகள், செலூலர் தொலைபேசிகள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றையும் ஒரு கார் மற்றும் ஹையேஸ் வானையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இதையடுத்து இந்தப் 14 பேரும், நேற்று ஹபரண நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களை சொந்தப் பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

ஆபத்தான ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட இவர்களுக்கு உடனடியாக பிணை அனுமதி வழங்கப்பட்டமை குறித்து விடுதலைப் புலிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் தொடர்பான விபரங்களைத் தாம் கொழும்பிலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பியபோதும், இவர்கள் உடனடியாக பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இராணுவப் புலனாய்வுத் துறையும், பொலிஸாரும் அரசாங்கத்தின் உதவியுடனேயே கருணா குழுவினருக்கு பாதுகாப்பு வழங்கி வருவதை எடுத்துக்காட்டுவதாக விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறையினர் தெரிவித்தனர்.

இராணுவப்புலனாய்வுத் துறையினராலேயே கொழும்பிலிருந்து அழைத்துவரப்பட்டதாகக் கூறப்படும் இந்தப் 14 பேரும் மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் மட்டக்களப்பில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் நோக்குடனேயே அனுப்பப்பட்டிருக்காலம் என சந்தேகிக்கப்படுகிறது.

## தப்பியோடிய சிப்பாய்...

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிளுக்கும் அரசியல்துறையினர் அறிவித்ததையடுத்து யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு பதில் அதிகாரி றோகித பிரியதர்ச மேற்படி இராணுவ வீரரை சந்தித்து பேசினார்.

தொடர்ந்து யாழ்.மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் செம்மணன் போர்நிறுத்த கண்காணிப்பு குழு அதிகாரி சரணடைந்த சிப்பாயை சி.அப்பியசனிடம் ஒப்படைததார். இவரை இராணுவ பொலிஸிடம் ஒப்படைக்கப் போவதாக போர்நிறுத்த கண்காணிப்பக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சரணடைந்த சிப்பாயை பத்திரிகையாளர்கள் படம் எடுப்பதற்கு கண்காணிப்புக்குழு அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மோட்டார்...

இதனால், தலையில் பலமாக அடிபட்ட இவர், அந்த இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருக்கையில், பொதுமக்கள் ஓட்டோ ஒன்றில் ஏற்றி அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

எனினும், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட முன்னரே உயிரிழந்தார் என வைத்தியர்கள் தெரிவித்தனர். (ப)

# வடமராட்சியில் மீன்பிடிக்கச்சென்ற மூன்று மீனவரைக் காணவில்லை!

வடமராட்சி கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள், கடந்த மூன்று தினங்களாக வீடு திரும்பவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வலி. வடக்கின் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து இன்பருட்டியில் வசித்துவந்த சி.தீபன் (வயது 21), த.ஸ்ரீஸ்கந்தராசா (வயது30), வியாபாரிமூலை இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்துவந்த தி.சுப்பிரமணியம் (வயது52) ஆகிய மூவருமே காணாமற்போயுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு இன்பருட்டியிலிருந்து கடலுக்குச் சென்றிருந்த இவர்கள், நேற்றிரவு வரை வீடு திரும்பவில்லையென உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்றிரவுவரை இன்பருட்டி, சுப்பர் மடம் மீனவர்கள் கடலில் தேடுதல் நடத்தியபோதிலும், இவர்கள் கண்டு பிடிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (202)

# தென்னை மரத்திலிருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழந்தார்!

(புதுக்குடியிருப்பு)

மரத்தால் வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புதுக்குடியிருப்பு - 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பி.மனோகரன் (வயது - 45) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

தேங்காய் பிடுங்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய மேற்படி குடும்பஸ்தர், தவறிவீழ்ந்து படுகாயமடைந்ததையடுத்து உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

எனினும் அங்கு சிகிச்சையளிக்க முடியாத நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட போது - வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ப)

BOC
இலங்கை வங்கி அறிவித்தல்

இலங்கை வங்கியின் யாழ்.மாவட்டத்திலுள்ள கீழ்க் குறிப்பிட்ட கிளைகளில் 30.06.2003 ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீளப்பெற்றுக் கொள்ளப்படாத நகைகள் அனைத்தும் வெகுவிரைவில ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.

- யாழ்.மேற்றரக் கிளை
- யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- திருநெல்வேலி

மேற்படி கிளைகளில் 30.06.2003 இற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீளப்பெற்றுக்கொள்ளாதவர்கள் அவற்றினை மீளப்பெற்றுக் கொள்ளும்படியும் அல்லது வட்டியை மட்டும் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளு மாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உதவிப்பொதுமுகாமையாளர்,
(வடமாகாணம்),
இலங்கை வங்கி.

நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது
12 வருடங்களின் பின்னர் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
ஞானசௌந்தரி
(இசை நாடகம்)
ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர்
நீங்கள் பார்த்து உங்கள் மனங்களில் நிறைந்த
ஞானசௌந்தரியை
மீண்டும் ஒருமுறை பார்த்திட
அரிய சந்தர்ப்பம்
ஆசனங்களுக்கான பதிவுகளை இப்பொழுது யாழ் மன்ற அலுவலகத்தில் செய்துகொள்ளலாம்
ஜூலை-09,10,11-2004
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில்
மாலை 7.00 மணிக்கு
அன்பளிப்பு 30/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2393
-திருமறைக் கலாமன்றம்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.